பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

மங்கள வைபவங்களுக் கேற்ப உடுபுடவைகள்
ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை
ரூபா 3/50

★ காஞ்சிபுரம்
★ பெனாரிஸ்
★ கெலி தஞ்சூர்
★ பாட்லி
★ பட்டுவேஷ்டிகள்
மற்றும் சகலவிதமான பிளவ்ஸ் பீஸ் வகைகளுக்கும்
ராசி சில்க்ஸ்
நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

சுடர்: 5 சுக்கில ஹூ மாசி மீ 18 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 04 (02-03-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 23

## ஈழப் பிரகடனத்துக்கு முன்னறிவிப்பு:

# சுதந்திர தமிழீழ தேசிய அரசு பேரவையாக வடக்கு, கிழக்கு மாகாணசபை பிரகடனம்!

## தன்னைத்தானே மாற்றிக்கொண்டது;

### அரசமைப்பு நிர்ணய சபையாகவும் செயல்படுமாம்

திருகோணமலை, மார்ச் 2

வடக்கு, கிழக்கு மாகாணசபையானது தன்னாதிக்கமும், இறைமையுமுடைய ஈழ ஜனநாயகக் குடியரசின் தேசிய அரசுப் பேரவையாக தன்னைத் தானே பிரகடனப்படுத்தியிருக்கிறது.

சுதந்திர, இறைமையுள்ள ஜனநாயக தமிழீழக் குடியரசை ஸ்தாபிப்பதற்கான அரசமைப்பு நிர்ணய சபையாகவும் அது செயல்படும் என அறிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலை திருகோணமலையில் நடைபெற்ற வடக்கு - கிழக்கு மாகாணசபைக் கூட்டத்தில் இது சம்பந்தமான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாண சபையால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 19 அம்ச சாசனத்தை நிறைவேற்ற இலங்கை அரசுக்கு ஓராண்டு கால காலக்கெடு வழங்குவது என்றும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கை அரசு இதனை நிறைவேற்றத் தவறினால், சுதந்திர ஈழத்திற்கான இடைக்கால அரசாங்கத்தை (Provisional Government) 1991 ஆம் ஆண்டு மார்ச் 5ஆம் திகதி அமைப்பது என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இது சம்பந்தமான பிரேரணை வடக்கு, கிழக்கு மாகாண முதல்வர் திரு. அ. வரதராஜப்பெருமாளினால் நேற்று சபையில் பிரேரிக்கப்பட்டபோது சபையில் ஈ. பி. ஆர். எல். எவ், ஈ. என். டி. எல். எவ். உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு உறுப்பினரும் பிரசன்னமாகியிருந்தனர். முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் எவரும் சபையில் இருக்கவில்லை.

பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டதும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் சபையிலிருந்து வெளியேறினார். அடுத்து பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

(உ-எ)

## ஈழப் பிரகடன தீர்மானம் இதுதான்!

திருகோணமலை, மார்ச் 2

நேற்றுக் காலை வடக்கு, கிழக்கு மாகாணசபை கூடிய போது ''சுதந்திரத் தமிழ் ஈழம்'' தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:-

திருவள்ளுவர் ஆண்டு 2021 மாசி 17 ஆம் திகதியிலிருந்து (கி. பி. 1990 ஆம் ஆண்டு மார்ச் முதலாம் திகதியிலிருந்து) இந்த சபையானது தன்னாதிக்கமும் இறைமையுமுடைய ஈழ ஜனநாயகக் குடியரசின் தேசிய அரசுப் பேரவையாகச் செயல்படும் என்று இச்சபை பிரகடனப்படுத்துகிறது.

திருவள்ளுவர் ஆண்டு 2022 மாசிமாதம் 16 ஆம் ஆண்டு (கி. பி. 1991 ஆம் ஆண்டு பெப்ரவரி 28 ஆம் திகதி) வரை இச்சபையானது தன்னாதிக்கமும் இறைமையுமுடைய சுதந்திர ஈழ ஜனநாயகக் குடியரசுக்கான அரசியல் யாப்பு நிர்ணய சபையாக ஏற்படும் எனவும் இச்சபை பிரகடனப்படுத்துகிறது.

மேற் குறிக்கப்பட்ட ஓராண்டு கால எல்லைக்குள் ஸ்ரீலங்கா அரசானது இச்சபையினால் முன்வைக்கப்படும் பின்வரும் கோரிக்கைகளை முழுமையாகவும், முறையாகவும் நிறைவேற்றுமாயின் மட்டுமே மேற்குறிக்கப்பட்ட இரண்டு பிரகடனங்களையும் இச்சபை மீளாய்வு செய்யவும்,

(5ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் ஆயுதங்களை வைத்திருக்க அரசுஇணக்கம்

கொழும்பு, மார்ச் 2

ஆயுதங்களை வைத்திருக்கும் தடையில் இருந்து விடுதலைப் புலிகளுக்கு இலங்கை அரசு விதிவிலக்கு அளித்துள்ளது.

இந்திய அமைதிப்படை இலங்கையில் இருந்து வெளியேறும் வரை விடுதலைப் புலிகள் ஆயுதங்களை வைத்திருக்கும் விஷயத்தில் இலங்கை அரசு நிதானத்துடன் நடந்து கொள்ளும் என்று அமைச்சர் [...]ஞ்சன் விஜயரத்னா நேற்று [...]த்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இந்திய இராணுவம் இருக்கும் வரையும், தமிழ் தேசிய இராணுவத்திடம் ஆயுதங்கள் இருக்கும் வரையும், ஆயுதங்களை விட்டுவிட முடியாது என்று விடுதலைப் புலிகள் இயக்கம் கூறியுள்ளது. ஆனால் இந்திய இராணுவம் வெளியேறிய பின்னர் ஆயுதங்களை ஒப்படைத்து விடுவதாக விடுதலைப் புலிகள் ஜனாதிபதியிடம் உறுதி கூறியுள்ளனர் - என்றும் திரு. விஜயரத்னா தெரிவித்தார். (உ-எ)

## ஜி. சீ. ஈ உயர் பரீட்சை [...]ஓகஸ்ட் 10க்கு ஒத்திவைப்பு

[...]. சி. ஈ. உயர்தரப் [...]ட்சை ஆகஸ்ட் 10 ஆம் [...]திகதிக்கு ஒத்திவைக்கப்பட்[...]ள்ளதாக பரீட்சை ஆணை[...]ாளர் ஆ தர்வேதமுல்ல தெரிவித்தார்.

ஜூலை 23 ஆம் திகதி இப் பரீட்சை நடத்தப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. [ஒ-எ]

### [...]பயிலுநர் ஆசிரியர் தெரிவு:

## மேன்முறையீடு பரிசீலனை [...]ஆம் திகதி முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 2

[...]ாழ். மாவட்டத்தில் பயி[...]ர் ஆசிரியர் வெற்றிடங்[...]க்குத் தெரிவானவர்கள் [...]டர்பான மேன்முறையீடு[...]ள பரிசீலிக்கும் வேலைகள் [...]ர்வரும் 5ஆம் திகதி யாழ். [...]வித் திணைக்களத்தில் [...]பமாகவுள்ளன.

[...]ன்முறையீடுகளை ஏற்[...] இத்துடன் நிறுத்தப்படுகிறது.

மேன்முறையீடுகளைப் பரிசிலனை செய்வதற்கென குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சையோடு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எவரும் இக்குழுவில் இடம் பெற மாட்டார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-10)

## [...]மூன்றாம் ஆண்டு முதல் ஆங்கிலம் கட்டாய பாடம்

கொழும்பு, மார்ச் 2

[...]ஆம் ஆண்டு முதல் மாண[...]களுக்கு ஆங்கிலம் போதிப[...] கட்டாயமாக்கப்பட்டுள்[...]. இந்தத் திட்டத்தைச் [...]ற்படுத்த தற்போது பணி[...] உள்ள ஆங்கில ஆசிரியர் [...]து சேவையும், அது [...]ாதவிடத்து சேவையிலி[...] இளைப்பாறிய ஆசிரி[...]ன் சேவை ஒப்பந்த அடிப்படையிலும் பெற்றுக் கொள்ளப்படும்.

(5ஆம் பக்கம் பார்க்க)

### சுப நேரம்

2. 3. 1990

சுப நேரம்:
6.28 முதல் 7.58 வரை
ராகுகாலம்:
10.58 முதல் 12.28 வரை

## [...]ழ் டி. ஐ. ஜி. அலுவலகத்தை [...]னரமைக்க நடவடிக்கை

[...]ாழ்ப்பாணம், மார்ச்2

[...]பிராந்திய பிரதிப் [...]மாஅதிபர் அலுவல[...]லீஸ் விடுதிகள் ஆகிய[...]ப் புனரமைப்பதற் [...]நடவடிக்கைகள் மேற் [...]ளப்பட்டுள்ளன.

[...] கோட்டைப் பகுதி[...]அமைந்துள்ள இக்கட்ட[...]ின் சேதவிவரங்கள் சேகரிக்கப்பட்டுவருகின்றன.

சேத விவரங்கள் யாழ். அரசாங்க அதிபர் ஊடாக புனர்வாழ்வு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட இருக்கிறது.

புனர்வாழ்வு அமைச்சு புனரமைப்பு வேலைகளை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கும் எனத் தெரியவந்தது. (ஒ-10)

## வாழ்க்கைசெலவு புள்ளி 952·6

கொழும்பு, மார்ச் 2

கடந்த பெப்ரவரி மாதம் வாழ்க்கைச் செலவுப் புள்ளி 952·6 ஆக இருந்ததாக புள்ளி விவர கணக்கெடுப்புத் திணைக்களம் அறிவித்திருக்கிறது. [ஒ-எ]

### வ. பி. போ. சபையின்

## பஸ் ஆசனப் பதிவுகள் இனி தனியாரிடம் இல்லை

யாழ்ப்பாணம், மார்ச் 2

வ. பி. போ. சபையின் யாழ்-கொழும்பு பஸ் பயணத்துக்கான ஆசனப் பதிவுகளை தனியார் நிறுவனங்களில் பதிவு செய்வது நிறுத்தப்பட்டுள்ளதாக மத்திய போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளது.

கொழும்பு மத்திய பஸ் நிலையத்தில் யாழ்ப்பாணம் செல்வோர் தமது ஆசனப் பதிவுகளைச் செய்து கொள்ளலாம்.

தனியார் நிறுவனங்களில் ஆசனங்களைப் பதிவு செய்வதால் அந்த நிறுவனத்துக்கு பத்து ரூபா பதிவுக் கட்டணமாக போக்குவரத்துச் சபை வழங்கி வந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ-10)

## இந்திரா காங்கிரஸ் பழனியில் வெற்றி!

தமிழ்நாட்டில் பழனி நாடாளுமன்றத் தொகுதியில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் திரு. சேனாதிபதி கவுண்டர் 80 ஆயிரத்து 913 பெரும்பான்மைவாக்குகளால் வெற்றிபெற்றார்.

போட்டியிட்ட 51 வேட்பாளர்களில் 49 பேர் கட்டுப் பணத்தை இழந்தனர்.

### முடிவு விவரம்

மொத்த வாக்குகள்: 10 லட்சத்து 33 ஆயிரத்து 602.

அளிக்கப்பட்ட வாக்குகள்: 6 லட்சத்து 32 ஆயிரத்து 454.

செல்லுபடியான வாக்குகள்: 6 லட்சத்து 25 ஆயிரத்து 332.

சேனாதிபதி கவுண்டர் (இந்திரா காங்கிரஸ்) 3,16,938.

ராஜ்குமார் மன்றாடியார் (தி.மு.க.): 2,36,025.

உஷா ராஜேந்தர் (தாயக மறுமலர்ச்சிக் கழகம்): 38,275.

திருமதி சௌரிமுத்து (ஜனதா): 1,561.

ஏனைய 47 வேட்பாளர்களும் மொத்தமாகப் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை 32 ஆயிரத்து 533 ஆகும். [ஒ-எ]

### முச்சந்தி முரளி



அப்பபின்னை பஸ் 'ஹோல்டிலை' நிக்கவேண்டியதுதான்!

## இந்தியராணுவம் சுட்டதில் 21பேர் பலி

ஸ்ரீநகர், மார்ச் 2

நேற்று காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில் நடந்த இந்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது இந்திய இராணுவத்தினர் சுட்டதில் 21பேர் உயிரிழந்தனர் என்று பி. பி. சி நேற்று இரவு அறிவித்தது.

ஸ்ரீநகரின் இரண்டு இடங்களில் துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டது

(ஒ-எ)

## வரதர் அறிவிப்பு

லண்டன், மார்ச் 2

சுதந்திர ஈழ ஜனநாயகக் குடியரசின் தேசிய அரசுப் பேரவைத் தலைவராக முதலமைச்சர் வரதராஜப்பெரு பெருமாள் தன்னை அறிவித்திருக்கிறார். (உ)

## புதுவையின் முதலமைச்சராக இராமச்சந்திரன்?

பாண்டிச்சேரி, மார்ச் 1

பாண்டிச்சேரி சட்டசபை தி.மு.க. குழுத் தலைவராக முன்னாள் முதலமைச்சர் திரு. டி. இராமச்சந்திரன் நேற்று மாலை தெரிவுசெய்யப்பட்டார்.

பாண்டிச்சேரி முதலமைச்சராக திரு. இராமச்சந்திரனே வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(உ-எ)

# புதுவை ஆட்சி தி. மு. க. வசம்!

சென்னை, மார்ச் 2

பாண்டிச்சேரியில் தி. மு, க. கூட்டணி ஆட்சி அமைக்கும் என்று தி மு. க. தலைவரும் தமிழக முதலமைச்சருமான திரு. மு. கருணாநிதி சொன்னார்.

அமைச்சரவையில் ஜனதா தளத்துக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடமளிக்கப்படும் என்றும் திரு. கருணாநிதி தெரிவித்தார்.

பாண்டிச்சேரி யூனியன் பிரதேச சட்டசபைக் கூட்டணி அரசின் முதல்வர் யார் என்பதைத் தெரிவுசெய்யும் கூட்டம் நேற்று சென்னையில் நடைபெறவிருந்தது.

இதனிடையில் —

பாண்டிச்சேரி தி. மு. க. தலைவர் திரு. இராமசாமி நேற்று பாண்டிச்சேரி துணை நிலை ஆளுநர் திருமதி சந்திராவதியைச் சந்தித்து திருநள்ளாறில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சுயேச்சை எம், எல். ஏ. திரு. கமலக்கண்ணன் தி. மு. க. அரசு அமைக்க ஆதரவளிப்பதாகக் கூறியிருக்கிறார் என்பதைத் தெரிவித்தார்.

புதுவைத் தேர்தல் முடிவுகள் வருமாறு:-

மொத்த இடங்கள்: 30.
தி. மு, க. கூட்டணி:15.
இந்திரா காங்கிரஸ் கூட்டணி: 14. சுயேச்சை: 01.

### வ. பி.போ. சவில்.

## கருவாடு பெட்டியினுள் ரிவோல்வர்!

நெத்தலிக் கருவாடு வைக்கப்பட்டிருந்த பெட்டி ஒன்றினுள் இருந்து பிரௌனி ரக தானியங்கி ரிவோல்வர் ஒன்றைப் பசறைப் பொலீஸார் கைப்பற்றினர். (ஒ-எ)

## 42பஸ்கள் ஓடமுடியாத நிலையில்; இதுவரை தீக்கிரையானவை 30

### சேவை சீரின்மைக்கு இதுவே காரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 2

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் 30 பஸ்கள் 84ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடைபெற்ற அசம்பாவிதங்களின்போது தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

42 பஸ்கள் உதிரிப்பாகங்கள் இன்றி ஓடமுடியாத நிலையில் கைவிடப்பட்டுள்ளன,

இதன்காரணமாக வடபிராந்திய போக்குவரத்துச் சபை சீரான போக்குவரத்துச் சேவைகளை வழங்கமுடியாத நிலையில் இருப்பதாக வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடபிராந்திய போக்குவரத்துச்சபை சீரான சேவையை வழங்கவேண்டுமாயின்மேலும் 100 பஸ்கள் தேவைப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (உ-10)

[...]ளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பலவர்ணங்களில் லவ் பேட்ஸ் (Love Birds) விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். R.D. சிவகுரு, ஸ்ரேஷன் வீதி' சாவகச்சேரி. (2663)

Bangkok giant gauvas பாங்கொக் கொய்யாக் கன்றுகள் விற்பனைக்கு உண்டு. தாய் மரத்தை பழங்களுடன் பார்க்கலாம். பழம் ஒவ்வொன்றும் 1 கிலோ நிறைக்குக் கூடுதலான பழம் இனிமையானது. யோ. பத்நிநாதன், டச்வீதி, உடுவில். (2694)

அன்பர்களுக்கு அன்பார்ந்த வேண்டுகோள்: தவக்காலத்துக்கு ஏற்ற செபப்புத்தகங்கள், பசாம் புத்தகம், பசாம் ஒலிப்பதிவு நாடாக்கள், பெற்றுக்கொள்ளலாம். புனித சித்தாத்திரை மாதா செபமாலை ஸ்ரோர்ஸ், 140, சுருவில் வீதி, கரம்பொன். ஊர்காவற்றுறை, கிளை A3, ஆஸ்பத்திரி வீதி, மன்னார். (2670)

### தேவை

எழுத்துக் கோர்ப்பாளர்கள் (கொம்போஸிட்டர்கள்) உடன்தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் நேரில் வரவும். செட்டியார் அச்சகம், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C/3923)

### உடன் தேவை

அச்சகத்திற்கு தேவைப்படும் கையால் இயக்கும் பேப்பர் வெட்டும் இயந்திரம் (Paper cutter) உடன்தேவை. தொடர்பு கொள்ளவும்: செல்லத்துரை யோசப், டயானா இன்டஸ் றீஸ், ஆஸ்பத்திரி வீதி, மன்னார். (2689)

### பெண்மனேஜர் தேவை

விண்ணப்பதாரி உ. த.படித்தவராகவும், நிர்வாகத்தை திறமையாக நடத்தக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும் விண்ணப்பங்களை 5. 3 90க்கு முன் அனுப்ப வேண்டிய முகவரி: மல்றிசேவிஸ், இல. 28, பிரதான வீதி, யாழ்ப்பாணம் (2692)

### மணமக்கள் தேவை

பல்வகைத் தொழில்களிலும் மணமக்கள், சைவங்கள், மறுதாரங்கள் உண்டு. சாண்டார் மணமகன் தேவை. பகல் 1 மணிவரை சந்திக்கலாம். பன்முகமாற்றகம், ஸ்ருடியோ, டில்க்கா அருகில் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (11930)

### காஸ்குக்கர் திருத்த

உங்களுடைய GAS குக்கரில் பிழைகளா? இல்லையெனில் புதிய உதிரிப்பாகங்கள் மாற்றவேண்டுமா? எதுவாயினும் மிகத்திறமையான முறையில்குறித்ததவணையில் திருத்திக்கொடுக்கப்படும்- நீங்கள் நாடவேண்டிய இடம் Ma ka Enterprise 309 Stanley, Road, Jaffna. (11919)

### சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் எவ்வகையான பிரச்சினைகளையும் உன்னதமான மட்டக்களப்பு ஆருட மாந்திரீகமுறைப்படி அரச அங்கீகாரம் பெற்றுள்ள பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரால் வெற்றிகரமாய் தீர்வு காணப்படும். தொடர்பு கொள்ளுங்கள்: ''சக்தி சரவணா 210, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். (யாழ் இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக) வியாழன் விடுமுறை. (2641)

### போட்டோஸ்ரட்

யாழ் பஸ்நிலையத்தில் தங்களின் சகல ஆவணங்களையும் மிகவும் தெளிவாக போட்டோ ஸ்ரற்செய்து கொள்ளவும், ஆங்கில ரைப்பிங், மொழி பெயர்ப்புகளுக்கும் ஸ்ரீ காந் புத்தகசாலை, 165, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்புறம் யாழ்ப்பாணம். (C/3717)

### புத்தகம்

பங்குனி அம்புலிமாமா, சித்திரக்கதைகள், (50க்கு மேற்பட்ட ரகம்) கண்ணதாசன் எழுதிய நூல்கள், பொக்கட் கலண்டர்கள் சேதுராமனின் அதிஷ்ட விஞ்ஞானம், வேறு பல எழுத்தாளர்களின் எண்சோதிடங்களும் விற்பனை ஆகின்றது. ராஜன் புத்தகசாலை, 12, பஸ்நிலையம் யாழ்ப்பாணம். (11927)

## Licensed Surveyors' Association Northern Division

The Annual General Meeting of the Association will be held on Monday 05-03-1990 at the 'CENTRE FOR BETTER SOCIETY' 115, 4th Cross Street, Jaffna. Commencing at 9.30 a.m. Members are kindly requested to be present.

C. Sandrasegara
Hony Secretary

[2688]

28 - 2 - 1990 புதன்கிழமை உதயன் பத்திரிகையில் 5ஆம் பக்கத்தில் வெளிவந்த மூளாய் சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலைய பரீட்சை முடிவு விபரம் 1990.

**தொடர்ச்சி;**

**சாதாரண சித்தி (Pass)**

1. சுழிபுரம்:
   7. செல்வி மா. சுகித்திரா

29. மன்னார் மாவட்டம்:
   **சாதாரண சித்தி (Pass)**
   1. பி. சுகிதா
   2. எ. டெய்சிமலர்
   3. என். புவனேஸ்வரி
   4. ஏ. லட்சுமி
   5. பி. பார்வதி
   6. வி. புவனேஸ்வரி

28. மருதங்கேணி
   1. செல்வி ஜே. மேரிலூட்ஸ் அமலநாயகியின் பெயர் தவறுதலாக பிரசுரித்தமைக்கு மனம் வருந்துகிறோம்.

இயக்குனர்.
(2706)

# பண்ணை மார்புநோய் ஆஸ்பத்திரி மீள அமைக்க உதவுக!

## ஐ. நா. அதிகாரிகளிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம் மார்ச் 02 யாழ்பண்ணைமார்புநோய் ஆஸ்பத்திரியை மீளஅமைக்க உதவும் படி வட பிராந்திய சுகாதாரப்பணிப்பாளர்வைத்தியகலாநிதி என். கனகசபை ஐ. நா அதிகாரிகளைக் கேட்டுள்ளார்.

கடந்த வாரம்ஜெனிவாவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த ஐ. நா. ஸ்தானிகராலய அதிகாரிகளிடமே இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

சுகாதாரப்பணிப்பாளரால் சமர்ப்பிக்கப்பட்ட மற்றக் கோரிக்கைகள் பின்வருமாறு;

வடமாகாணத்தில் 74வைத்தியசாலைகள் உண்டு. ஆனால் இவற்றுக்குமருந்துவகைகளை விநியோகம் செய்ய மத்திய மருந்தகம் இல்லை. எந்த வைத்திய சாலையும் கொழும்பு சென்றேமருந்தைஎடுத்து வரவேண்டியுள்ளது, இந்நிலை நீடிக்காமல் இருக்க மத்திய மருந்தகம் ஒன்றை நிறுவ வேண்டும்.

★ யாழ்-பிராந்திய சுகாதார அலுவலகத்துக்கு கட்டடம் ஒன்றை அமைத்துத்தர வேண்டும்.

(2 - 3 - 10)

## மரங்களை லொறிகளில் ஏற்ற பெர்மிட் கட்டணம் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 2 மரங்களை லொறிகளில் ஏற்றிச் செல்வதற்கான பெர்மிட் கட்டணம் மார்ச் 1 ஆம் திகதி முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

வன பாதுகாப்புத் திணைக்களம் இந்த அதிகரிப்பு குறித்து மாகாணசபைகளுக்கும் அரசாங்க அதிபர்களுக்கும் அறிவித்திருக்கிறது.

ஒரு பெர்மிட்டுக்கு புதிய கட்டணமாக 125 ரூபா செலுத்துதல் வேண்டும். பழைய கட்டணம் 100 ரூபா.

பலகைகளை ஏற்றிக் கொண்டு செல்லும் டிராக்டர் பெர்மிட் கட்டணம் பத்து ரூபாவால் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. (இ-எ)

## புதுக்குடியிருப்பில் பாராட்டு விழா

முல்லைத்தீவு, மார்ச் 2 புதுக்குடியிருப்பைச் சேர்ந்த திரு. பொ. சிங்கரத்தினம் முதுகலைமாணிப் பட்டம் பெற்றதை இட்டு எதிர்வரும் 4 ஆம் திகதிபாராட்டு விழா நடைபெற உள்ளது.

புதுக்குடியிருப்பு மாகவித்தியாலய பழைய மாணவர் சங்கமும் ஜனசக்தி சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் இப்பாராட்டு விழா புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் கொத்தணி அதிபர் திரு. ச. நாகரத்தினம் தலைமையில் நடைபெறும்.

திரு. பொ. சிங்கரத்தினத்துக்கு முல்லை மாவட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. என் எஸ். மனோகரன் பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பார். (இ-92)

## விளையாட்டுப் போட்டியால் நற்பண்புகள் வளர்கின்றன

### வித்தியாலய விளையாட்டுப் போட்டியில் உரை

கொழும்புத்துறை, மார்ச்.2 ''போட்டி வேண்டும் பொறாமை கூடாது. விளையாட்டுப் போட்டிகள் மூலம் மாணவர்மத்தியில் நற்பண்பு, நல்லொழுக்கம், சேவை மனப்பான்மை ஆகியன வளர்க்கப்படுகின்றன.

யாழ். சனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட வட பிராந்திய விற்பனை அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதம கணக்காளரும் பாடசாலையின்பழைய மாணவருமாகிய திரு. சு. சண்முகரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் திரு. மு. இராமலிங்கம் இப்போட்டியில் தலைமை வகித்து உரையாற்றுகையில், 'மாணவர்கள் உடல் ஆரோக்கியம் பெறவும் வாழ்க்கையில் மேம்பாடு அடையவும் விளையாட்டுப் போட்டிகள் வழி வகுக்கின்றன'' என்று கூறினார்.

யாழ். கல்வித் திணைக்கள விளையாட்டு அதிகாரி திரு. கே. நாகமணி, கல்லூரி விளையாட்டுப் பொறுப்பாளர் திரு. க. வை. தனேஸ்வரன் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

வைத்திய கலாநிதி திருமதி சுமதி சண்முகரத்தினம் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை வழங்கினார்.

விளையாட்டுப் போட்டிகளில் கனகரத்தினம் இல்லம் முதலாம் இடத்தையும், ஸாகரா இல்லம் இரண்டாம் இடத்தையும் பெற்றன. [சு-30]

## விளையாட்டுப் போட்டிகள் இன்றும் நாளையும்

கரவெட்டி, மார்ச்.2 அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை மாலை 2 மணிக்கு நடைபெறும்.

பிரதம விருந்தினராக உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. பீ. வீரபத்திரன் பங்குபற்றுவார்.

பருத்தித்துறைபிரதிக் கொத்தணி அதிபர் திரு. என். ஆனந்தராஜன் கொடியேற்றுவார்.

பருத்தித்துறை கொத்தணி அதிபர் திரு. பீ. பாலசிங்கம் பரிசில்களை வழங்குவார்.

★

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும்.

கல்லூரி அதிபர் திருமதி. லீலாவதி சந்திரசேகரம் தலைமை வகிப்பார்.

★

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் வருடாந்தஇல்ல விளையாட்டுப்போட்டி நாளை சனிக்கிழமை கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.

கல்லூரி அதிபர் திரு. சு. சிவபாதசுந்தரம்தலைமையில் போட்டிகள் நடைபெறவுள்ளன. சச்சேரி கணக்காளர் திரு. இராசநாயகம் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வார். (இ-70)

## அராலியில் வலைப்பந்தாட்ட போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 2 வலி மேற்கு சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பெண்கள் வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி தற்பொழுது நடைபெறுகின்கின்றது.

கடந்த மாதம் 25 ஆம் திகதி சுழிபுரம்விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டிகளில் அராலி மாவத்தை அணி அராலி நிலாவெளி அணியை வென்றது. வட்டு இந்து வாலிபர் சங்க அணி அராலி கலைவாணி அணியை வென்றது.

இறுதிப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை அராலி மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்தில் பி.ப. 4மணிக்குநடைபெறவுள்ளது. (க)

## நினைவு தினமும் மலர் வெளியீடும்

யாழ்ப்பாணம் மார்ச் 2 திரு .கி. வா. ஜகந்நாதன் நினைவு தினமும் மலர் வெளியீட்டு விழாவும் எதிர் வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மு. ப 9 மணிக்கு நீர்வைக் கந்தன் ஆலய தீர்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்பல்கலைக்கழகப்பேராசிரியர் பிரம்ம ,, ஸ்ரீ கா கைலாசநாதகுருக்கள் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில், திரு . கி . வா . ஜ ஆற்றிய சமய, இலக்கிய, தமிழ்ப்பணிகளை நினைவு கூருமுகமாக ஸ்ரீ ,, ஜகந்நாத பிம்பம்,, என்னும் நூல்வெளியிடப்படும். [சி]

## கலை நிகழ்ச்சிகள்

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி தென்மராட்சி மாணவர் அமைப்பின் கலை கலாசாரகுழுவினரின் கலை நிகழ்ச்சிகள் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெற்றன ''நாங்கள் வந்தபாதை'' வில்லிசை, ,,ஒரு கிளி புலியாகிறது'' ஆகிய இரு நிகழ்ச்சிகள் இடம் பெற்றன (இ-3)

## வட்டு இந்து மரதன் ஓட்டப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 2 வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி அதன் வருடாந்த விளையாட்டுப் போட்டியின் ஒரு அங்கமாக மரதன் ஓட்டப்போட்டி ஒன்றை 4 ஆம் திகதி காலை நடத்த விருக்கின்றது.

ஷப்றா யூனிக்கோபினான்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் ஆதரவுடன் இந்த மரதன் போட்டி நடைபெறுகின்றது.

மரதன் ஓட்டப்போட்டியில் பாடசாலை ஆண் மாணவர்கள் எவரும் கலந்து கொள்ளலாம் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## நெஷனல் T V

இரண்டு வருட உத்தரவாதத்துடன்
பெற்றுக் கொள்ள நம்பிக்கையுடன்
நாடவேண்டிய இடம்:

**V. K. இராசரத்தினம்**
**95, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

[சி-3948]

வெளிவந்துவிட்டது!

★ அதிசிறந்த ஜோதிட புத்தகம் ★

ஆயர்பாடி ராசிபலன் 1990 – 91

— 12 ராசிக்கும் தனித்தனிப் பிரதிகள் —

விசேஷமான தினப்பலன்களைக் கொண்டது. உங்களது வாழ்க்கைக்கு நல்வழி காட்டுவது எல்லா பத்திரிகை விற்பனையாளர்களிடமும் பெறலாம். தபாலில் பெற 15 × 1 ரூபா முத்திரை அனுப்புக.

ஆயர்பாடி [illegible] P.O

(2705)

## பரிசளிப்பு விழா

தண்ணீரூற்று இந்துதமிழ்க் கலவன் பாடசாலையில் 1988 - 89 ஆம் ஆண்டுகளின் ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா எதிர் வரும் 5 ஆம் திகதி அதிபர் தலைமையில் நடைபெறும். (இ-92)

யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

## மின்தறி நெசவாளர் உடன் தேவை (பெண்கள்)

1. மின்தறி நெசவாளர்:
   வயதெல்லை — 18 – 35 வரை
   தகைமை — மின்தறி அல்லது கைத்தறியில் அனுபவம்.
2. மின்தறி நெசவாளர் பயிலுநர்:
   வயதெல்லை — 18 – 25 வரை

இவர்களுக்கு எமது தொழிற்சாலையில் பயிற்சி அளிக்கப்படும்.

விண்ணப்பம், சான்றிதழ்களுடன் கீழ்வரும் முகவரியில் அமைந்துள்ள எமது ஆலைக்கு நேரில் வரவும்.

பொது முகாமையாளர்.

முகவரி:
**யாழ் கூட்டுறவு புடவை ஆலை,**
**இருபாலை வீதி, கோண்டாவில்.**

(சி/3949)

திருக்கேதீஸ்வர இந்து இளைஞர் மன்ற

## அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

மகா சிவராத்திரி விழாவையொட்டி திருக்கேதீஸ்வர இந்து இளைஞர் மன்றத்தினால் மன்ற காரியாலயத்தில் நடத்தப்பட்ட அதிஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசு பெற்ற இலக்கங்கள் பின்வருமாறு:-

1 ஆம் பரிசு 591 (சைக்கிள்)
2 ஆம் பரிசு 644 (கசற் செற்)
3 ஆம் பரிசு 495 (பெற்றோமக்ஸ்)

ஆறுதல் பரிசாக கைக்கடிகாரங்களைப் பெறும் 20 இலக்கங்கள் முறையே.

329, 185, 1216, 242, 847, 696, 364, 802, 318, 592, 267, 568, 915, 709, 121, 1001, 22, 505, 609, 618.

(சி/3421)

★ சவூதி அரேபியா ★

## வேலைவாய்ப்பு - SOMC

| | | | |
|---|---|---|---|
| 1. | Civil Engineer | ...B. Sc. | — 1800 SR |
| 2. | Mech Engineer | ...B. Sc. | — 2500 SR |
| 3. | Electric / Electronic Engineer | ...B. Sc. | — 2500 SR |
| 4. | Telephone Technician | ...Dip | — 900 SR |
| 5. | General Electrical Technician | ...Dip | — 900 SR |
| 6. | Electronics Technician | ...Dip | — 900 SR |
| 7. | Auto Electrical Technician | ...Dip | — 800 SR |
| 8. | Pump Mechanic | ...Dip | — 700 SR |
| 9. | General Technician | ...Dip | — 700 SR |
| 10. | Plumper | ...Dip | — 600 SR |
| 11. | Painter | | — 500 SR |
| 12. | Electrician | ...Dip | — 600 SR |
| 13. | Female Cleaners | ...Dip | — 400 SR |
| 14. | Sheet Metal Worker | | — 600 SR |
| 15. | Washer | | — 300 SR |
| 16. | Laundry Press Labourers | | — 700 SR |
| 17. | Laundry Labourer | | — 300 SR |
| 18. | Tailor | | — 600 SR |
| 19. | Labourers | | — 300 SR |

★ நேர்முகப்பரீட்சை 06-03-1990 கொழும்பில் நடைபெறும்.

**A. தவச்செல்வம்**
B. Sc Hons
நெல்லியான் றோட்,
சுழிபுரம்.

[C-3950]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

**பொருள்:**

இரத்தல் என்னும் காவல் இல்லாத மரக்கலம் உள்ளதை ஒளித்து வைக்கும் தன்மையாகிய வன்னிலம் தாக்கினால் உடைந்து விடும்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288
02-03-1990 த. பெ. இலக்கம் : 23

# பஸ் சேவை சீராகுமா?

**வ**டபிராந்தியப் போக்குவரத்துச் சபைக்கு மாதம் 40 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையில் தற்போது 150 பஸ்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்றன. கோண்டாவில், காரைநகர், பருத்தித்துறை, கிளிநொச்சி முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய இடங்களில் டிப்போக்கள் இயங்குகின்றன. மொத்தம் 1400 ஊழியர்கள் வேலை செய்கிறார்கள்.

ஊழியர் சம்பளத்துக்கும், பஸ்கள் பராமரிப்புக்கும் மாதம் 1 கோடி ரூபா செலவு ஏற்படுகிறதாம். இதில் 60 லட்சம் ரூபா மட்டுமே வருமானமாகக் கிடைக்கிறது. மிகுதி 40 லட்சம் ரூபாவும் நஷ்டம்.

இந்த நஷ்டத்தை ஈடுசெய்ய வடபிராந்திய போக்குவரத்துச்சபை என்ன செய்யப் போகிறது? இதுவே இன்றைய கேள்வி.

சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் நாட்டின் போக்குவரத்துத் துறையில் வடபிராந்தியம் பெரும் லாபம் ஈட்டும் பகுதியாக விளங்கி வந்தது. கொழும்பு—யாழ்ப்பாணம் ரயில் சேவை மூலம் ரயில்வே பகுதி பெரும் லாபம் ஈட்டி வந்தது. ஏனைய பகுதிகளில் ஏற்பட்ட இழப்புக்களை இந்த லாபம் மூலம் ஈடுசெய்யக்கூடியதாக இருந்தது. அதே போன்றே பஸ் போக்குவரத்தும் ஓரளவு சிறப்பாக நடைபெற்று வந்தது.

ஆனால் கடந்த 5 ஆண்டுகளாக தொடர்ச்சியாக இடம் பெற்ற சம்பவங்களால் வடபகுதி ரயில் சேவை பாதிக்கப்பட்டு நஷ்டம் ஏற்பட்டது. பெருந்தொகையான பஸ்களை இழந்த நிலையில் வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கும் இதே கதியே ஏற்பட்டது.

வடக்கில் தற்போது அளவுக்கு அதிகமான ஊழியர்கள் இருக்கின்றனர். ஆனால் பஸ்கள் மிகக்குறைவு. தற்போது உள்ள ஊழியர்களைப் பயன் படுத்தி புதிய பஸ்களைச் சேவைக்கு விடுவது மூலம் வடபிராந்திய போக்குவரத்துச் சபையை லாபமூட்டும் நிறுவனமாக மாற்றலாம்.

இதற்கு இன்னும் 100 பஸ்களாவது தேவைப்படும் என்று கூறப்படுகிறது.

இதற்கான பணத்தை வடக்குத் தெற்கு என்ற பேதம் இன்றி போக்குவரத்து அமைச்சு உடனடியாக ஒதுக்கித் தருவது அவசியம்.

அதே சமயம் பழுதடைந்த பஸ்களைத் திருத்திச் சேவைக்கு விடுவது மூலமும் பஸ்சேவையைச் சீர் செய்யலாம்.

கோண்டாவில் டிப்போவில் மட்டும் வடபிராந்தியப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 42 பஸ்கள் உதிரிப்பாகங்கள் இன்றி கட்டையில் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. உதிரிப்பாகங்களை இந்தியாவிலிருந்து தருவிக்க பணம் வேண்டும்.

திறைசேரி மத்திய போக்குவரத்துச் சபைக்கு 100 கோடி ரூபாவை ஒதுக்கிக் கொடுத்துள்ளது.

இதில் ஒரு சில கோடி ரூபாக்களை வடபகுதிக்கு விட்டாலே பஸ்சேவை சீரடைந்து விடும்,

போக்கு வரத்துச் சபை முன்வருமா?

### சர்வதேச நேரடித் தொலைபேசி

## மிகச் சிலரே சலுகைகளை அனுபவிக்கின்றனராம்

கொழும்பு, மார்ச். 02

சர்வதேச நேரடித் தொலைபேசி அழைப்புக்களை எடுப்பதில் வழங்கப்படும் சலுகையை மிகச் சிலரே அனுபவிக்கின்றனர்.

தொலைத் தொடர்பு திணைக்களம் நடத்திய ஆய்வு ஒன்றில் இது தெரிய வந்துள்ளது.

தினமும் நள்ளிரவு 12 மணி முதல் அதிகாலை 6 மணி வரை வெளிநாடுகளுக்கு நேரடியாக டயல் செய்து பேசுபவர்களுக்கு கட்டணத்தில் 40 சதவிதக் கழிவு வழங்கப்படுகிறது.

இந்தச் சலுகையை மிகச் சிலரே அனுபவிக்கின்றனர்.

தொலைபேசி அழைப்புக்களை பகல் நேரங்களில் எடுப்பதால் ஏற்படும் நெருக்கடியைத் தவிர்க்கவே இச் சலுகை வழங்கப்படுகிறது.

பிரான்ஸ், மேற்கு ஜேர்மனி, இத்தாலி உட்பட பதின் நான்கு நாடுகளுடன் நேரடி டயல் தொலைத் தொடர்பு கொள்பவர்கள் இச் சலுகைக் கட்டணத்தைச் செலுத்தலாம்,

இதற்கு இணங்க இந்த மூன்று நாடுகளுடன் மத்திய கிழக்கு நாடுகள், பிரிட்டன் ஆகிய நாடுகளுடன் நேரடித் தொலைத் தொடர்பு பெறுவதற்கு ஒரு நிமிடத்திற்கு 57 ரூபாவும் கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் தொடர்பு கொள்ள ஒரு நிமிடத்துக்கு 63 ரூபாவும் கட்டணமாக அறவிடப்படுகிறது.

(இ-எ)

### மருந்து தட்டுப்பாடு

கொடிகாமம் மார்ச் 2

சாவகச்சேரி மருந்து விற்பனைக் கடைகளில் மருந்து வகைகளுக்கு பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

(இ-75)

வயதெல்லைக்கு முன்

# சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வு பெற விரும்புவோருக்கு சலுகை

### வடபிராந்திய போக்குவரத்துச்சபை நடவடிக்கை

யாழ்ப்பாணம் மார்ச் 2

ஓய்வு பெறும் வயதெல்லைக்கு முன் சுய விருப்பத்தின் பேரில் ஓய்வு பெற வடபிராந்திய போக்குவரத்து சபை சலுகை வழங்க இருக்கிறது.

வடபிராந்திய போக்குவரத்துச் சேவையில் பணிபுரிந்த ஊழியர்கள் சுய விருப்பத்தின் பேரில் ஓய்வு பெற 86 ஆம் ஆண்டு அளிக்கப்பட்ட சலுகையின் அடிப்படையில் 410 பேர் ஓய்வு பெற்றிருந்தனர்.

அச்சமயம் 20 ஆயிரம் ரூபா விஷேட கொடுப்பனவாக வழங்கப்பட்டிருந்தது.

தற்சமயம் சலுகை அதிகரிக்கப்பட்டுள்ளது. முன் செய்த சேவைக்காலத்துக்கு நஷ்டஈடு, மறுக்கப்பட்ட சேவைக்காலத்துக்கான நஷ்டஈடு என கூடுதல் சலுகை வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சலுகைகளைப் பெற்று ஓய்வு பெற விரும்புபவர்கள் இம்மாதம் (மார்ச்) 31ஆம் திகதிக்கு முன்பதாக விண்ணப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3-10)

### மிருதங்க நிகழ்ச்சியில் முதலிடம்

யாழ்ப்பாணம், மார்ச்.2

சென்னையிலுள்ள 25 பாடசாலைகள் பங்குபற்றிய மிருதங்க நிகழ்ச்சி ஒன்றில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவன் கே. ரி. இறைவன் முதல் இடம் பெற்றார் இவர் யாழ். சென்ஜோன்ஸ்கல்லூரிபழைய மாணவனும், யாழ். பல்கலைக் கழக இராமநாதன் நுண்கலைக்கழக மிருதங்க விரிவுரையாளர் சங்கீத ரத்தினம் எம். சிதம்பரநாதனின் மாணவனுமாவார்.

இவர் தற்போது சென்னையில் படித்துக்கொண்டிருக்கிறார்.

(இ)

### நியமனம்

யாழ். மாவட்ட உதவிச் சிறு கைத்தொழில் திணைக்களத்தில் பதவி நிலை உத்தியோகத்தராகக் கடமையாற்றிய திரு. ந. கனகசுந்தரம் பிள்ளை அதே திணைக்களத்தில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (க)

### புதிய மின் சிட்டை முறை

காங்கேசன்துறை மார்ச் 2

வலி வடக்கு பிரதேசசபை எல்லைக்குள் வதியும் மின் பாவனையாளர்களுக்கு மாதந்தோறும் 5ஆம் திகதி அவர்களது வீடுகளிலேயே மின்சிட்டைகளை வழங்கும் நடைமுறை செயல்படுத்தப்பட்டுள்ளது.

இதை அடுத்து மயிலிட்டி, தெல்லிப்பழை, மல்லாகம் உப அலுவலகங்களின் பகுதிகளிலும் இந்நடைமுறைவிரைவில் செயல்படுத்தப்பட உள்ளதாகவும் வலி வடக்கு பிரதேசசபை விசேட ஆணையாளர் திரு. வை. இராசையா தெரிவித்தார்.

அதே வேளை மின் கட்டணங்களை மின் சிட்டை வழங்குபவரிடம் செலுத்த முடியாதெனவும், அதனை உப அலுவலகத்திலேயே செலுத்த முடியுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

(க-68)

### பாடசாலை விடுகைப்பத்திரங்கள் இன்றி அதிபர்கள் திண்டாட்டம்

யாழ்ப்பாணம் மார்ச் 2

யாழ். மாவட்டத்தில் பாடசாலை விடுகைப் பத்திரம் இல்லை என்று புகார் கூறப்படுகிறது.

பிராந்தியக் கல்வி அலுவலகம் இதுபற்றி மத்திய அரசின் கல்வியமைச்சரிடம்கோரிக்கை வைத்தபோது மாகாண அரசாங்கமே இந்தப் பத்திரத்தை அச்சிட்டு வழங்க வேண்டும் என்று மத்திய அரசு தெரிவித்து வருகிறது.

ஆனால் மத்திய அரசு சிங்கள மொழியிலான விடுகைப் பத்திரங்களை யாழ். கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பியுள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்த இழுபறிநிலையால் மாணவர்களுக்கு விடுகைப் பத்திரம் வழங்கமுடியாதுள்ளதாக அதிபர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (சு-3)

### சித்தி

யாழ்ப்பாணம் மார்ச். 02

சுளிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலயத்தை சேர்ந்த செல்வன்கள் ந. ரமேஸ்வரன், கி. அருள் நேசன் ஆகியோர் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

(இ)

## பாதிக்கப்பட்டோருக்கு சர்வோதயம் சுயதொழில் உதவி

பருத்தித்துறை, மார்ச். 02

இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சுய தொழில் உதவியை வழங்க வட பிராந்திய சர்வோதய சிரமதான இயக்கம் முன்வந்துள்ளது.

வல்வெட்டித்துறை தனிப்பனைக் குடியேற்றத் திட்டத்தில் வசிக்கும் (விதவையான) திருமதி, ச. பஞ்சாட்சரதேவி என்பவருக்கு சுயதொழில் உதவியாக வடமராட்சி சர்வோதயப் பொறுப்பாளர் திரு. ப. தில்லைநாதனால் நல்லினக்கறவை மாடும், பராமரிப்புச் செலவும் வழங்கப்பட்டன.

இந்த வகையில் மேலும் பலருக்கு இம் மாதத்தில் சுய தொழில் உதவி வழங்கப்படவுள்ளதென வட பிராந்திய சர்வோதய சிரமதான இயக்க வெளிக்கள இயக்குனர் திரு. க. சிவசுப்பிரமணியம் தெரிவித்தார்.

(இ-118)

## 11 அரச வாகனங்கள் பலாலி ராணுவ முகாமில்

யாழ்ப்பாணம், மார்ச். 02

யாழ் மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்களுக்குச் சொந்தமான வாகனங்கள் பலாலி ஸ்ரீலங்கா இராணுவ முகாமில் உள்ளன.

பெருந்தெருக்கள் திணைக்களத்துக்குச் சொந்தமான 5 வாகனங்களும், விவசாயத் திணைக்களத்துக்கு சொந்தமான3 வாகனங்களும், மலேரியா தடுப்பு திணைக்களம், உணவுக்கட்டுப்பாட்டு திணைக்களம், தொலைத் தொடர்பு திணைக்களம் ஆகியவற்றுக்கு சொந்தமான தலா ஒவ்வொரு வாகனமும் பலாலி ஸ்ரீலங்கா இராணுவ முகாமில் வைக்கப்பட்டுள்ளன.

இந்த வாகனங்களை உரியவர்கள் வந்து பெறுமாறும், அப்படிப் பெறாவிட்டால் அவை முகாமில் இருந்து அகற்றப்படும் என்றும் இராணுவ அதிகாரி கேணல் ராசபுத்திரம் அறிவித்துள்ளார்.

யாழ்-அரசாங்க செயலகம் குறிப்பிட்ட திணைக்களங்களுக்கு இது சம்பந்தமாக கடிதம் எழுதியுள்ளது.

(இ-3-10)

## விஞ்ஞான ஆய்வு கூடத்துக்கு அடிக்கல் நடப்பட்டது

கொடிகாமம், மார்ச். 02

கொடிகாமம் திருநாவுக்கரசு கொத்தணி மூலாதார மகாவித்தியாலயத்தில் சுமார் இரண்டு லட்சம் ரூபா செலவில் விஞ்ஞான ஆய்வுகூடம் அமைக்கப்படும்.

இதற்கான அத்திவாரக்கல் சமீபத்தில் நடப்பட்டது. வித்தியாலய துணை அதிபர் திரு. தம்பு கந்தையா அடிக்கல்லை நாட்டினார்.

கல்வித்திணைக்களத்தைச் சேர்ந்த தொழில் நுட்ப உத்தியோகத்தர் திரு. எஸ். முத்துக்குமாருவும் வைபவத்தில் சமுகம் அளித்திருந்தார்.

(இ-75)

## குறுக்கு வீதிகளுக்கும் ரீயூப்லைட்

யாழ் மாநகரசபையின் ஏனைய பிரதான வீதிகளுக்கும் குறுக்கு வீதிகளுக்கும் ரியூப் லைட்டுக்கள் பொருத்தப்படவுள்ளன.

இதற்காக மேலும் 500 ரியூப் லைட்டுக்களை மாநகர சபை கொள்வனவு செய்ய உள்ளது.

ரியூப்லைட் திட்டத்துக்கு 10லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக மாநகரசபை ஆணையாளர் தெரிவித்தார்.

(இ-310)

# இடமாற்றம் பெற்ற 42 ஆசிரியருக்கு ஒதுக்கப்பட்ட புதிய பாடசாலைகள்

யாழ்ப்பாணம் மார்ச் 2

பிற மாவட்டங்களிலிருந்து யாழ் மாவட்டத்துக்கு இடம் மாற்றம் பெற்ற 42 ஆசிரியர்களுக்கு உரிய பாடசாலைகள் தற்போது குறித்து ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்தப் பாடசாலைகளில் கடமைகளைப் பொறுப்பேற்று அதன் பின்னர் அது குறித்து சம்பந்தப்பட்ட கோட்டக் கல்வி அதிகாரிக்கும், சம்பளக் கிளைக்கும் தனித்தனியாக அறிவிக்கும்படி சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை யாழ் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டிருக்கிறார்.

ஆசிரியர்களின் பெயரும் அவர்களுக்கு குறித்து ஒதுக்கப்பட்ட பாடசாலைகளின் விபரமும் வருமாறு:-

**கொழும்பு மாவட்டத்திலிருந்து இடம் மாற்றம் பெற்றோர்:-**

டி. எச். ஜே. எதிர்மான சிங்கி (ஆனைப்பந்தி மெ.மி.த.க. பா), திருமதி வீ. லோகநாதன் (யாழ். சிறிய புஷ்பம் மகளிர் வித்தி), சகோதரர் ம. அதெல்வீவா (அச்சுவேலி புனிததிரேசா வித்தி), திருமதி எஸ். எல். சற்குணராசா (சுதுமலை சின்மய பாரதி வித்தி), செல்வி எம். சண்முகநாதன் (மானிப்பாய் மகளிர் கல்லூரி), திருமதி தி. கே. சந்திரசேகரம் (தும்பளை சைவப்பிரகாச ம.வி.), திருமதி எஸ். தேவதாசன் (மகாஜனாக் கல்லூரி), ஆர். குணநாதன் (அச்செழு சைவப் பிரகாச வித்தி), செல்வி கே. நாகரத்தினம் (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி) எஸ். மார்க்கண்டு (டிறிபேக் கல்லூரி).

திருமதி தவமணி கந்தரா (கைதடி விக்கி. வித்தி), செல்வி மீரா கணேசன் (பருத்தித்துறை புனித தோமஸ் றோ.க. ம. வித்), எஸ். நகுலராசா (சாவகச்சேரிஇந்துக்கல்லூரி), செல்வி லி. விநோதினி (யாழ். இளையதம்பி வித்தி), கே. வி. இராசதுரை (மீசாலை வீரசிங்கம் வித்தி), செல்வி என். கேதாரநாயகி (மண்டைதீவு றோ.க.பா.), செல்வி எஸ். கணபதிப்பிள்ளை (கரம்பன் சண்முகானந்தா ம. வித்), கே. சிறிகதிர்காமசம்பந்நர் (அருணோதயா கல்லூரி), கே. வரதராசமூர்த்தி (கைதடி முத்துக்குமாரசாமி வித்தி), கே. சிவசுப்பிரமணியம் (தும்பளை சைவப்பிரகாச வித்தி)

எஸ். நாகராசா (உசன் இராமநாதன் ம. வித்தி), செல்வி எஸ். நன்னித்தம்பி (இராமநாதன் கல்லூரி).

**கம்பகா மாவட்டத்திலிருந்து**

செல்வி கே. ரேவதி (கரவெட்டிவிக்கி வித்தி), திருமதி எஸ். தேவயோகம் (மட்டுவில் சந்திர மௌலீச வித்தி), கே. விஜயகுமார் (மறவன் புலோ சகலகலா வல்லி த. க. பா.)

**மினுவாங்கொட மாவட்டத்தில் இருந்து**

ரி. எங்கரசு (புத்தூர் சிறி சோமாஸ்கந்தா கல்லூரி)

**நிக்கவெரட்டியா மாவட்டத்தில் இருந்து**

கே. செல்வராணி (சங்கானை சைவப் பிரகாச வித்தி)

**குருநாகல் மாவட்டத்தில் இருந்து**

செல்வி கே. செல்லத்துரை (பாசையூர் புனித அந்தோனியார் கல்லூரி), செல்வி ஆர். தனலட்சுமி (புனித சாள்ஸ் ம. வித்தி), செல்வி ரி. ஜோர்ஜ் (பாசையூர் புனித அந்தோனியார் கல்லூரி), செல்வி வீ. கனகமணி (மூளாய் சைவப் பிரகாச

(5ஆம் பக்கம் பார்க்க)

## சமய நிகழ்ச்சிகளில்

### மடுத்திருவிழாக்கள்

வவுனியா, மார்ச் 2

மடுத்திருப்பதியில் வழமையாக இடம்பெறும் பங்குனி மாத திருவிழாக்கள் இவ்வருடமும் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மடுத்திருப்பதியின் பரிபாலகர் அறிவித்துள்ளார்.

பங்குனி மாதம் 10ஆம் திகதியும் 15 ஆம்திகதியும் இவ்விரு விழாக்களும் நடைபெறும். முதலாம் திருவிழாவிற்கான ஆயத்தவழிபாடு 6ஆம் திகதியும் இரண்டாம் திருவிழாவிற்கான ஆயத்த வழிபாடு 11ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

15ஆம் திகதிய திருவிழாவில் கலந்து கொள்ளும் அடியார்களின் நன்மை கருதி விசேட போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-164)

## வாசகர் திருமுகம்

### கசிப்பு உற்பத்தி

கல்வியங்காடு, நாய்மாடு, திருநெல்வேலி போன்ற பகுதிகளில் சட்ட விரோதமாகக் காய்ச்சப்படும் உயிர்க்கொல்லியான கசிப்பு உற்பத்தி அதிகரித்துள்ளது. இக் கசிப்பு உற்பத்தி மக்கள் நடமாட்டம் குறைந்த கிராமங்களின் ஒதுக்குப் புறங்களிலேயே கூடுதலாக காணப்படுகின்றது எனவே இதனை இல்லாதொழிப்பதற்கு உரியவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா?

கல்வியங்காடு.

—நலன்விரும்பி

### ஜனசக்தியின் பிரச்சினைகள்

நேர்முகப் பரீட்சையில் ஜனசக்தி பெறுபவர்களுக்கு மேல் அதிக புள்ளி கொடுக்கப்படுகின்றது. இதனால் ஜனசக்தி இல்லாதவர்கள்இப்புள்ளியை இழக்க நேரிடுகின்றது.

உண்மையில் ஜனசக்தி பெறுபவர்கள் யார்? நாட்டு நிலைமை காரணமாக உண்மையில் வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ளவர்களுக்கு இந்தத் திட்டம் சென்றடையவில்லை அரசாங்கத்தில் குறைந்த வருமானம் பெறுபவர்களும், ஓய்வூதியம் பெறுபவர்களும் தான் கூப்பன், ஜனசக்தி இன்றி பாதிக்கப்படுகிறார்கள். இதனால் இப்படிப்பட்ட குடும்பப்பிள்ளைகள் உண்மையில் வறுமைக்கோட்டுக்குக் கீழ் இருந்தும் ஜனசக்திக்குக் கொடுக்கப்படும் புள்ளியினால் இப்பதவி இழக்க நேரிடுவதுடன் ஜனசக்தி பெறுபவர்களுக்கே இப்பதவி சென்றடைய உதவுகிறது.

அத்துடன் மீண்டும் ஒரு புதுப்பிரச்சினையாக ஜனசக்தி கொடுக்கப்படும் இடங்களில் உள்ள சில ப.நோ.கூ சங்கங்கள் ஜனசக்தி பெறுபவர்களுக்கு சாமான்கொடுத்து மிகுதி இருந்தால் அன்றி மற்றவர்களுக்கு பொருட்கள் கொடுப்பது மறுக்கப்படுகின்றது. இதனால் ப. நோ.கூ. சங்கங்களில் மலிவு விலையில் கொடுக்கப்படும் பொருட்களைக் கூட இவர்கள்வாங்க முடியாது கஷ்டப்படுகிறார்கள்.

25000 ஆசிரியர் தெரிவில் ஜனசக்திக்கு கொடுக்கப்படும் புள்ளியை மீளாய்வு செய்ய மாட்டார்களா? இனியாவது தொடர்ந்து வரும் பதவி வெற்றிடங்களுக்கு ஜனசக்தி பெறுவோர்க்கு கூடுதல் புள்ளி கொடுப்பதும் வங்கிக்கடன் முதலிய சலுகைகளில் ஜனசக்திக்கு முதலிடம் கொடுப்பதையும் மீளாய்வு செய்து சகலருக்கும் நீதி கிடைக்கக் கூடிய விதத்தில் திட்டங்கள் அமைய உரியவர்கள் கவனம் எடுப்பார்களா?

**ஆ. கண்ணன்**
யாழ்ப்பாணம்.

### பயிற்சி வகுப்பு

பச்சிலைப்பள்ளி மார்ச் 2

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட சுகாதார திணைக்களங்களில் கடமையாற்றிய சிற்றூழியர்களில் பரிசாரகர்களாகத்தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான மூன்று மாத காலபயிற்சி வகுப்புகள் தெல்லிப்பளை ஆதார வைத்திய சாலையில் நடைபெற்று வருகின்றன.

(இ-117)

## கண்டதும் கேட்டதும்

பாண் நிறையில் மோசடி! இறைச்சி வாங்கினால் அதிலும் மோசடி!! இப்படி எந்தச் சாமான் வாங்கினாலும் மோசடியில் சிக்கித் தவிக்கிறார்கள் பாவனையாளர்கள்.

தற்போது தங்கப் பவுண் நிறுவை மோசடி பற்றியும் ஒரு செய்தி வெளி வந்திருக்கிறது.

தங்கத்தை எடை போட்டுப் பார்க்க குண்டுமணியை பாவிக்கலாம். அந்தக் குண்டுமணியில்தான் ''இரகசியம்'' இருக்கிறது. குண்டுமணி விதையைத் துளைத்து அதனுள் பாதரசத்தைச் (மெர்க்குரி) செலுத்தி அடைத்து விடுகிறார்களாம்.

இந்த மோசடி தலைநகர் கொழும்பில் நடக்கிறது என்கிறது நிறுவைகள், அளவைகள் திணைக்களம்.

— செய்தி லோலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## PERSONAL CLASS

விசேட ஆங்கில மொழி வகுப்பு
Special English Course
By Mr. T. N. PANCHADCHARAM

✶ உயர்கல்வி ✶ தொழிற்கல்வி
பாடசாலை விலகிய மாணவர்களுக்குரியது.

ஆரம்பம்: 03 - 03 - 1990
மு.ப 8.30 — 10.30

**New Science Academy**
JAFFNA.

பி.ப. 3.00 — 5.00

**Science Academy**
NALLUR.

(சி/3927)

# ஜனநாயக சீர்திருத்தம் கோரி
# நேபாள அமைச்சரவையில் பிளவு

காத்மண்டு மார்ச் 01 நேபாளத்தில் பல கட்சி ஜனநாயக நடைமுறையை கொண்டு வரும்படி கோரி எதிர்க்கட்சிகள் தொடர் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருவது தெரிந்ததே.

இதற்கு நேபாள அமைச்சரவையில் ஒரு பிரிவினர் ஆதரிப்பதாகத் தெரிய வந்துள்ளது.

நேபாள நாடாளுமன்றம் என்றழைக்கப்படும் ரஷ்ட்ரீய பஞ்சாயத்திலும் ஜனநாயக சீர்திருத்தத்திற்கு ஆதரவு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

140 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் இரு குழுக்களாகப் பிளவுண்டுள்ளனர்.

கடந்த மாதம் 18 ஆம் திகதி நடந்த ஜனநாயக ஆதரவு ஆர்ப்பாட்டங்களின் போது பொலிஸார் சுட்டதை ஆட்சேபித்து 40 எம்பிக்கள் பகிரங்கமாக அறிக்கையொன்றையும் வெளியிட்டனர்.

ஜனநாயக சீர்திருத்த நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளாத பட்சத்தில் ராஜினாமாச் செய்யப்போவதாக மூன்று அமைச்சர்கள் மன்னர் பிரேந்திராவுக்கு அறிவித்து விட்டனர். (எ)

## ‘மிக்’ தயாரிப்பு உடன்பாடு

புதுடில்லி, மார்ச். 01 மிக் சண்டை விமானங்களை கூட்டாக உற்பத்தி செய்வது சம்பந்தமான பேச்சுக்களை இந்தியாவும் சோவியத் யூனியனும் முடித்துக் கொண்டன.

இது சம்பந்தமான உடன்பாடு விரைவில் இரு நாடுகளாலும் கைச்சாத்திடப்பட உள்ளன. (எ)

## இந்திய மத்திய அமைச்சரவை கம். - பாரதிய ஜனதா சேருமா?

புதுடில்லி, மார்ச் 1 மத்திய அமைச்சரவையில் சேர்ந்து கொள்ள பாரதிய ஜனதாக் கட்சியும் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியும் முன் வந்துள்ளன. என்று நிதி அமைச்சர் பேராசிரியர் மது தண்டவதே தெரிவித்தார்.

இப்போது ஜனதாதளம், தெலுங்குதேசம், திமுக, காங்கிரஸ் (எஸ்) அஸாம் கண பரிஷத் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளே மத்திய அமைச்சரவையில் அங்கம் வகிக்கின்றனர்.

பாரதியஜனதா, கம்யூனிஸ்ட் கட்சிகள் வெளியில் இருந்து கொண்டு தேசிய முன்னணி அரசுக்கு ஆதரவளிக்கின்றன.

ஆனால்திரு. மதுதண்டவதே கூறியதை பாரதிய ஜனதாவும்கம்யூனிஸ்ட்கட்சியும் நிராகரித்து விட்டன.

மத்திய அமைச்சரவையில் சேரும் எண்ணம் கிடையாதென அவை கூறிவிட்டன.

## சர்வ அதிகாரங்களையும் பெற்ற சோவியத் ஜனாதிபதி

மாஸ்கோ, மார்ச் 1 கூடுதல் அதிகாரங்களைப் பெற்றவராக இனி சோவியத் ஜனாதிபதி விளங்குவார்.

நிறைவேற்று ஜனாபதி என்ற முறையில் கூடுதல் அதிகாரங்களை வழங்கும் சட்டம் நேற்று சோவியத் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

யுத்தப்பிரகடனம் செய்வது நாடாளுமன்ற ஜனநாயக முறையை ரத்துச் செய்வது அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பிப்பது நாட்டில் எந்த மாநிலத்திலும் ஜனாதிபதி ஆட்சி முறையைக் கொண்டு வருவது - ஆகிய அதிகாரங்களைக் கொண்டவராக சோவியத் ஜனாதிபதி இனி விளங்குவார். (எ)

## இந்திய அமைச்சரவை இவ்வாரம் விஸ்தரிப்பு!

புதுடில்லி மார்ச் 1 இந்திய நாடாளுமன்றத்தில் வரவு செலவுத்திட்டக் கூட்டத்தொடர் மார்ச் 12 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது.

அதற்கு முன்னர் இந்திய அமைச்சரவை விஸ்தரிப்பு இடம் பெறவிருப்பதாக புதுடில்லி அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ் வாரம் புதிய அமைச்சர்கள் நியமனம் பற்றி அறிவிக்கப்படலாம் என்று தெரிகிறது.

மாநில சட்டசபைத் தேர்தல்கள் பெப்ரவரி 27 உடன் முடிவடைந்தன.

அதன் பின்னர் அமைச்சரவையை விஸ்தரிப்பது என்று பிரதமர் வி. பி. சிங் முன்னர் தீர்மானித்திருந்தார். (எ)

## கொம்பியூட்டர் கல்வி

BASIC PROGRAMMING COURSE
Commencing on: 3 - 3 - 1990 (Sat & Sun) 9 a.m.

**IDP COMPUTER CENTRE**
342, K.K.S. Road, Jaffna.
(சிவன் கோவிலடி) (சி/3946)

## ஆட்கள் தேவை

கீழ்க்காணும் வேலைக்கு ஆட்கள் தேவை.
அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்.

1. Mechanical Draughtsman
2. Fitter பொருத்துனர்
3. Latheman லேத்மன்
4. Welder வெல்டர்

உடன் விண்ணப்பங்களை
09 - 03 - 1990 க்கு முன்னர் அனுப்பவும்.

**யுனிரெக் என்ஜினியரிங்,**
61, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
(11929)

## கேள்வி அறிவித்தல்

### கடற்றொழில் அமைச்சு
### வடக்கு கிழக்கு மாகாண அரசு

வட கிழக்கு மாகாணத்திலுள்ள மீனவர்களுக்கு பின்வரும் வள்ளங்களையும், வெளியிணை இயந்திரங்களையும் வழங்குவதற்காக வள்ளச்சாலை உரிமையாளர்களிடமிருந்தும், வெளியிணை இயந்திர விற்பனை முகவர்களிடமிருந்தும் முத்திரை இடப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றது.

1. வாவிகளில் மீன்பிடிப்பதற்கான 15 அடி நீளமுள்ள கண்ணாடி நூலிழைத் தோணிகள்.
2. கிளிங்கர் வகையைச் சேர்ந்த 17½ அடி நீளமுள்ள கண்ணாடி நூலிழை வள்ளங்கள்.
3. 8 முதல் 10 குதிரைச் சக்தி கொண்ட வெளியிணை இயந்திரங்கள்.
4. 18 அடி முதல் 20 அடி நீளமுள்ள மரத்தினாலான வள்ளங்கள்.

திருகோணமலை, உட்துறைமுக வீதியிலுள்ள வடக்கு கிழக்கு மாகாண கடற்றொழில் அமைச்சுச் செயலாளரால் 30-03-1990 முற்பகல் 10.00 மணி வரையும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பதாரிகள் கேள்வி விண்ணப்பங்களைத் தயாரித்து நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமோ சமர்ப்பிக்கலாம். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ‘வள்ளங்களையும் இயந்திரங்களையும் விநியோகிப்பதற்கான கேள்விகள்’ எனக் குறிப்பிடுதல் வேண்டும். ஒவ்வொரு பொருட்களுக்குமான விலை விபரங்கள். வள்ளங்களின் வடிவ அமைப்பும் பயன்படுத்தப்படும் மூலப்பொருள் பற்றிய விபரமும், வெளியிணை இயந்திரங்களைப் பற்றி விவரிக்கக் கூடிய முக்கியமான தகவல்கள் ஆகியவற்றையும் கேள்வி விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

செயலாளர்,
உணவு வர்த்தக கடற்றொழில் அமைச்சு,

வடக்கு-கிழக்கு மாகாணம்,
உட்துறைமுக வீதி,
திருகோணமலை. [சி-3412]

**TV TRAVELS & TOURIST**

## உடனடி வேலைவாய்ப்பு

### ★ SAUDI Operation & Maintenance Co. Ltd.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | CIVIL ENGINEER | 1600 | — | 1900 |
| 1 | MECHANICAL ENGINEER | 2000 | | |
| 1 | TELEPHONE TECHNICIAN | 9000 | — | 1000 |
| 2 | GENERAL ELECTRICIAN | 650 | — | 700 |
| 1 | ELECTRONICS TECHNICIAN | 900 | — | 1000 |
| 2 | AUTO ELECTRICAL TECHNICIAN | 800 | — | 900 |
| 2 | PUMP MECHANIC | 700 | — | 900 |
| 1 | ELECTRICAL TECHNICIAN | 600 | — | 700 |
| 1 | LAUNDRY SECTION HEAD | 700 | — | 750 |
| 1 | GENERAL ELECTRICIAN | 600 | — | 700 |
| 3 | PLUMBER | 600 | — | 700 |
| 19 | FEMALE PORTERS | 300 | | |
| 21 | PORTERS | 300 | | |
| 2 | PAINTER | 500 | — | 600 |
| 2 | AUTO WORK SHOP LABOURERS | 300 | | |
| 1 | TAILOR | 600 | — | 700 |
| 6 | WASHER | 300 | | |
| 3 | LAUNDRY PRESS LABOURERS | 600 | — | 700 |
| 5 | LAUNDRY LABOURERS | 300 | | |
| 5 | LABOURER CIVIL SECTION | 300 | | |

வயது எல்லை 21 — 47

நேர்முகப் பரீட்சை: 06 - 03 - 1990

### ★ KUWAIT

30 RESTAURANT WAITER உடன் தேவை. உணவு. தங்குமிடம் இலவசம்.

வயது எல்லை 18 — 40
சம்பளம்: 30 K.D

| | | |
|---|---|---|
| 40 | DRIVERS | — 55 K.D |
| 60 | HEAVY VEHICLE DRIVERS | — 70 K.D |
| 5 | MECHANICS | — 90 K.D |
| 3 | TYREMAN | — 50 K.D |
| 1 | SECRETARY (Female) | — 145 K.D |

ஆண்கள் வயது: 20 — 47 பெண்: 25 — 35

கடவுச்சீட்டு, 3 பாஸ்போர்ட் சைஸ் படம், அனுபவச்சான்றிதழ் என்பவற்றுடன் உடன் எமது காரியாலயத்துடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

**Front of Railway Station**
**Brown Road, Kokuvil.**
C/3935

## அந்தியேட்டி அழைப்பு



### திருமதி நாகம்மா சின்னத்தம்பி

எங்கள் குடும்பத்தின் தீபமாகவும் அன்புத் தெய்வமாகவும் விளங்கிய அன்னையின் அந்தியேட்டி 02 – 03 – 90 வெள்ளிக்கிழமை காலை கீரிமலையிலும் வீட்டுக்கிரியைகள் மறுநாள் சனிக்கிழமை திருநெல்வேலியிலுள்ள எமது இல்லத்திலும் நடைபெறும் நிகழ்ச்சிகளில் கலந்து அன்னையின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

சகோதரி, மக்கள், மருமக்கள்,
பேரர், பீட்டர்.

மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி. [2701]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### சுந்தரராஜ் [மேஜர் கமல்]


தாயக மண்ணில்: 11 – 10 – 1960
தாயகத்தின் விடிவிற்காக 02 – 03 – 1989

எங்கள் அன்பின் சுந்தரமே மீளாத்துயில் கொண்டு எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு சென்று விட்டாய்.

உன் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

4 ஆம் வாய்க்கால்,
கிளிநொச்சி. [2702]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 07-06-1942
●
மறைவு: 31-01-1990

### தம்பையா சிவானந்தன்

(இளைப்பாறிய தொழில் நுட்பவியலாளர்,
கட்டிடத்திணைக்களம், யாழ்ப்பாணம்.)

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்
உற்றார், உறவினர்கள்.

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம். [2697]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கில் அரசபடை பெரும் இராணுவ முஸ்தீபு!

## நான்கு கட்ட திட்டம் குறித்து ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம் எச்சரிக்கை

சென்னை, மார்ச் 2

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெரிய அளவில் இராணுவ நடவடிக்கைகளை நான்கு கட்டங்களாக மேற்கொள்ள இலங்கை அரசு திட்டம் வகுத்து இருப்பதாக ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம் கூறியிருக்கிறது.

இயக்கத்தின் மத்திய குழு உறுப்பினர் திரு. கே. சாந்தன் இதனை சென்னையில் செய்தியாளர்களிடம் தெரிவித்திருக்கிறார்.

இந்த இராணுவ நடவடிக்கைக்கு 'பிரேமே' என்று பெயர் சூட்டப்பட்டிருப்பதாகவும் அவர் சொன்னார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

இலங்கை இராணுவத் திட்டத்தின் முதல் கட்ட நடவடிக்கை சென்ற ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஆரம்பமாகிவிட்டது.

வடக்கு-கிழக்குக்கு வெளியே பொலன்னறுவை, அனுராதபுரம், பதுளை ஆகிய இடங்களில் உள்ள இராணுவ நிலைகளைப் பலப்படுத்துவதே இத்திட்டத்தின் முதல் கட்டமாக அமைகிறது. திருமலையில் உள்ள கடற்படைத் தளம், மின்னேரியாவில் உள்ள விமானப் படைத்தளம், வவுனியா, அம்பாறை, திருகோணமலை ஆகிய இடங்களில் உள்ள இராணுவ நிலைகளும் பலப்படுத்தப்பட்டு வருகின்றன.

விடுதலைப் புலிகள் மற்றும் போராளிக் குழுக்களின் பதில் தாக்குதல் பலத்தைப் பலவீனப்படுத்துவதே இரண்டாம் கட்டமாகும். பிரதானமாக மலையகத் தமிழரின் பலத்தை பலவீனப்படுத்துவதும் அவர்களின் ஒரு நோக்கம்.

பொலன்னறுவை, அம்பாறை, பதுளை, திருகோணமலை ஆகிய இடங்களில் இருந்து விமான உதவியுடன் துருப்புக்களை நகர்த்துவதன் மூலம் கிழக்கில் இருந்து விடுதலைப் புலிகளை வெளியேற்றுவது அவர்களது மூன்றாவது கட்டமாகும்.

இதன் மூலம் திருகோணமலையை முற்றாக தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதே இலங்கை அரசின் சூழ்ச்சியாகும். அனுராதபுரத்தில் இருந்து படைகளை அனுப்பி கொக்கிளாய் — மன்னார்—வவுனியா எல்லையில் பாதுகாப்பு நிலையை அரசு ஏற்படுத்தும்.

வடக்கு இலங்கையை தமிழீழ விடுதலைப் புலிகள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள இலங்கை அரசு அனுமதிக்கப்போகிறது. இது நான்காவது கட்டமாகும்.

திருகோணமலைக்குப் பதில் அம்பாறையைத் தலைநகராகக் கொண்ட மாகாண நிர்வாகம் ஒன்றை கிழக்கில் ஏற்படுத்தவும் அரசு திட்டமிட்டுள்ளது. திருகோணமலையை சுதந்திர துறைமுகமாக அபிவிருத்தி செய்யவும் அரசு திட்டமிட்டுள்ளது.

இந்த நான்கு கட்ட நடவடிக்கைகளும் ஒருவருட காலத்தினுள் முடியலாம்.

அதே நேரத்தில் சிங்களவரைக் குடியமர்த்துவதன் மூலம் கிழக்கு மாகாணத்தின் இனவிகிதாசார நிலையை அரசு மாற்றியமைக்கும். கிழக்கிற்கு விசேட அதிரடிப் படையை அனுப்புவதன் மூலம் அங்கு வாழும் தமிழரை வடக்கு அல்லது இந்தியாவுக்கு செல்ல நிர்ப்பந்திப்பதும் அரசின் திட்டமாகும்.

இந்திய அமைதிப்படை இங்கு இருக்கும்போதே வெலிஓயாவைப் பாதுகாப்பு வலயமாக இலங்கை அரசு பிரகடனம் செய்தது. அங்கு சிங்களவர் குடியமர்த்தப்பட்டனர்.

மார்ச் 31ஆம் திகதியளவில் அமைதிப்படை வெளியேறிய பின்னர் குடியேற்றத்தைக் கண்காணிக்க எவருமே இருக்கமாட்டார்கள்.

திருகோணமலையில் தற்சமயம் பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகளும் இரண்டு இஸ்ரவேல் ஆலோசகர்களும் தங்கியிருப்பதாக ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்துக்குத் தகவல் கிடைத்துள்ளது. அண்மையில் 38 பிரிட்டிஷ் அதிகாரிகளும் திருமலையில் தங்கியிருந்தனர்.

இராணுவ நடவடிக்கையின் நோக்கம் வடக்கில் இருந்து கிழக்கைப் பிரிப்பதே.

கிழக்கை இழந்தோமானால் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் பிரதேசத் தொடர்பு துண்டாடப்பட்டுவிடும். பின்னர் தமிழரின் நிலை அந்தரமானதாகவே இருக்கும்.

ஜனாதிபதியின் ஓர் ஆணை மூலம் வடக்கு-கிழக்கு இணைப்பை ரத்துச் செய்யமுடியும்.

இந்தியாவில் உள்ள மாநிலங்கள் அனுபவிக்கும் அதிகாரங்கள் அளவு வடக்கு - கிழக்கு மாகாணசபைக்குக் கிடைக்கும் என்று இந்திய அரசு உத்தரவாதம் தந்தபடியால்தான் ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம் தனது ஆயுதப் போராட்டத்தை இடைநிறுத்தி மாகாணசபையை இடைக்கால ஏற்பாடாக ஏற்றது. இதற்காக எமது இயக்கம் பல உயிர்களைத் தியாகம் செய்தது.

தமிழர் மீது இராணுவத் தீர்வைத் திணிக்க கொழும்பு அரசு முயற்சித்தால் சுதந்திர ஈழத்துக்கான ஆயுதப்போராட்டத்தில் ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம் ஈடுபடும்.

1987இலும் பார்க்க இன்று கிழக்கு மாகாணத்தில் இலங்கை இராணுவத்தின் முகாம்கள் அதிகமாக உள்ளன.

— இப்படி திரு. சாந்தன் சொன்னார். (உ)

### இடமாற்ற---

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வித்).

குளியாப்பிட்டி மாவட்டத்தில் இருந்து

செல்வி சிவசோதி பொன்னையா (வீமன்காமம் ம. வித்.), கிருஷ்ணபாலசுப்பிரமணியம் (சென். ஜேம்ஸ் மகளிர் ம. வித்.), பீ. செந்தில்நாதன் (உரும்பிராய் இந்துக் கல்லூரி), ஏ. இராமநாதன் (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

சிலாபம் மாவட்டத்தில் இருந்து

பி. விசுவநாதன் (அச்செழு சைவப்பிரகாச வித்தி.), சிவஞானசுந்தரம் (கலாநிதி ஆ. தியாகராஜா ம. ம. வி.)

புத்தளம் மாவட்டத்தில் இருந்து

திருமதி ஐ. பாலச்சந்திரன் (சுதுமலை வடக்கு அ. த. க. பா), செல்வி என். சுபத்திரா (டிறிபேக் கல்லூரி சாவகச்சேரி), திருமதி பொ. புவனேஸ்வரி (யாழ்ரன் கல்லூரி காரைநகர்), பீ. வின்சென்ட் (மண்டைதீவு ம. வித்) ரி. பாலச்சந்திரன் (கனகரத்தினம் ம. ம. வித்.) (இ-118)


PERSONAL CLASSES

B. M. C முன் லேன், யாழ்ப்பாணம்.

A / L BOTANY

ஆசிரியர்

திரு. செல்வநேசன்

A/L 90

DAY CLASS

PAPER CLASS

A/L 90 & 91

WEEK END CLASS

ஆரம்பம்: 3- 3- 90

சனிக்கிழமை

காலை 10. 30 மணி

(C/3419)


### சோவியத் பிரமுகர்களுக்கு இன்று உபசரணை

கொழும்பு, மார்ச் 2

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சோவியத் நாட்டின் பாரதி ஆய்வாளர்களும் கவிஞர்களுமான அனெரொலி பார்பரா, வியாசெஸ்லாங் குப்றியானோவ் ஆகியோரைக் கௌரவிக்குமுகமாக இந்து சமய கலாசார தமிழ் அலுவல்கள் ராஜாங்க அமைச்சின் சார்பாக தேநீர் உபசரணை வைபவமொன்று இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கொம்பனித்தெரு வொக்ஹோல் வீதியில் உள்ள இலங்கைக் சாப்புறுதிக் கூட்டுத்தாபனக் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

ராஜாங்க அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ் நிகழ்ச்சிக்குத் தலைமை வகிப்பார். (இ)

### ஈழப் பிர--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு, கிழக்கு மாகணசபை எனச் செயற்படவும் தயாராக இருக்கிறது என்பதையும் இச்சபையானது அறிவிக்கிறது.

இச்சபை ஸ்ரீலங்கா அரசுக்கு எதிர்வரும் ஓராண்டு காலக்கெடுவுக்குள் நிறைவேற்றும்படி முன்வைக்கும் கோரிக்கைகள் பின்வருமாறு:-

(கலைஞர் கருணாநிதியிடம் ஈ. பி. ஆர். எல். எப். அண்மையில் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்த 19 நிபந்தனைகளும் பிரேரணையில் எடுத்துக் குறிப்பிடப்பட்டிருந்தன )

- மேற் குறிப்பிடப்பட்ட காலக்கெடுவுக்குள் ஸ்ரீலங்கா அரசானது மேற்குறிக்கப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றாத பட்சத்தில் இச்சபையினரால் எதிர்வரும் ஓராண்டு கால எல்லைக்குள் உருவாக்கப்படும் அரசியலமைப்பின் அடிப்படையில் சுதந்திர ஈழ ஜனநாயகக் குடியரசுக்கான இடைக்கால அரசாங்கம் (Provisional Government) உருவாக்கப்படும்.

சுதந்திர ஈழ ஜனநாயக குடியரசின் ஏற்பாட்டு அரசாங்கம் திருவள்ளுவர் ஆண்டு 2022 மாசிமாதம் 19 ஆம் திகதி கி. பி. 1991 மார்ச் 3 ஆம் திகதி முதல் சுதந்திர ஈழ குடியரசின் நிலப்பாடுகள் மீதும் கடற்பிராந்தியத்தின் மீதும் தனது தன்னாதிக்கத்தையும், இறைமையையும், ஒருமைப்பாட்டையும் நிலைநாட்டுவதற்கான எல்லா வகையான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் எனவும் இச்சபை பிரகடனப்படுத்துகிறது.

''வடக்கு, கிழக்கு மாகாணம்'' என இன்று அழைக்கப்படும் ஈழம் வாழ் மக்களின் ஆணையைப் பெற்ற பிரதிநிதிகளைக் கொண்டிருக்கும் இச்சபையினரால் அறிவிக்கப்படும் மேல்வரும் பிரகடனங்களுக்கு இச்சபையிலும், ஈழத்தின் அனைத்துக் கட்சிகளினதும், அனைத்து [illegible] ளினதும், ஸ்ரீலங்கா வாழ் அனைத்து [illegible] ளினதும் ஆதரவைக் கோருவதோடு, சர்வதேச நாடுகளையும், சர்வதேச நிறுவனங்களையும், நீதியும், நியாயமும் நிறைந்த இப்பிரகடனங்களை [illegible] இச்சபை [illegible] பட்டிருக்கிறது. (உ)

### விபத்தில் காயம்

குருநகர், மார்ச் 2

நேற்றுக் காலை யாழ். நாச்சிமார் கோவிலடி கே. கே. எஸ். வீதியில் நடந்த விபத்தொன்றில் சைக்கிளில் சென்ற ஓட்டுமடத்தைச் சேர்ந்த எஸ். காளிதாஸ் (வயது 60) காயமடைந்தார். (ஒ-51)

### விடுதலையானோர் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், மார்ச் 2

இராணுவ தடுப்பு முகாம்களில் இருந்து உள, உடல், பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஒன்றுகூடல் ஒன்று இடம்பெறவிருக்கிறது.

ஒன்றுகூடல் நிகழ்ச்சி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறும் என யாழ் மாவட்ட தடை முகாம்களிலிருந்து விடுதலை செய்யப்பட்டோர் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் திரு. சி. ந. கதிர்வேலு தெரிவித்தார். (ஒ)

### புதிய அதிபர் அறிவிப்பு

மனாகுவா, மார்ச் 1

நிக்கரகுவாவின் ஆயுதப்படைகள் தனது பூரண கட்டுப்பாட்டில் இருக்கும் என்று புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட திருமதி வயலெற்றா ஷாமொறா நேற்று அறிவித்தார்.

பத்திரிகையாளர் மாநாட்டில் புதிய ஜனாதிபதி பேசினார். (எ)

### சான்றிதழ் வைபவம்

சாவகச்சேரி மார்ச் 02

அறவழிக் குழுவினரால் நடத்தப்பட்ட சிறுவர் நல்லொழுக்கப் பயிற்சி நெறியின் பூர்த்திவிழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சியும் கைதடி நுணாவில் காந்தி நினைவு மண்டபத்தில் இடம்பெற்றது. குழுவின் தலைவர் திரு. வி. எஸ் துரைராசா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா, நீதிபதி திரு. கே. திருநாவுக்கரசு ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர் திருமதி ஈஸ்வரிஜீவகதாஸ் சான்றிதழ்களை வழங்கினார் (இ-31)

## யாழ். தபாலகத்தில் மீண்டும் இரவு நேரக் கடமைகள்

### மிக விரைவில் ஆரம்பிக்கப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 2

மிக விரைவில் யாழ். மத்திய தபால் அலுவலகத்தில் மீண்டும் இரவு நேரக் கடமைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

இரவில் பஸ் சேவைகள் நீடிக்கப்பட்டுள்ளதாலும், அசம்பாவிதங்கள் ஏதும் இல்லாததாலும் இரவுக் கடமைக்கு ஊழியர்கள் வர ஏதுவாக இருப்பதாகக் கூறப்பட்டது.

இரவு நேரக் கடமை ஆரம்பிக்கப்பட்டதும் தபால் தரம் பிரிக்கும் வேலைகள் உடனுக்குடன் மேற்கொள்ளப்பட்டு, கூடிய விரைவில் தபால் உரியவரிடம் போய்ச்சேர வாய்ப்பு ஏற்படும் என தபால் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-10)

### மூன்றாம். . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு நேற்று இசுறுபாயவில் நடைபெற்ற கல்வி அமைச்சின் கலந்துரையாடல் ஒன்றில் முடிவு செய்யப்பட்டது.

3 ஆம் ஆண்டு முதல் 6 ஆம் ஆண்டு வரை சிங்கள மாணவர்கள் தமிழையும், தமிழ் மாணவர்கள் சிங்களத்தையும் கற்பது அவசியம் என்றும் வலியுறுத்தப்பட்டது.

கல்வி பற்றி தேசிய கொள்கையொன்றை வகுப்பது என்றும் தேசிய கல்வி நிறுவனம் ஒன்றை நிறுவுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

இந்தத் தகவல்களை கல்வி அமைச்சின் செயலாளர் கேர்ணல் குடலிகம தெரிவித்தார். (ஒ-9)

### மண்வெட்டி இன்றி அதிருப்தி

கொடிகாமம் மார்ச் 2

மண்வெட்டிக்கு விண்ணப்பித்த சாவகச்சேரி கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட விவசாயிகள் பலர் மண்வெட்டி பெறுவதற்காக மீண்டும் மீசாலை விவசாயவிரிவாக்க அலுவலகத்திற்கு சென்று வருகின்றனர்.

மண்வெட்டி வழங்கப்படாதது குறித்து அவர்கள் அதிருப்தி கொண்டுள்ளனர். (இ-75)

## சட்டசபைத் தேர்தல் முடிவுகள்

**பீஹார்**

| | |
|---|---|
| மொத்த இடங்கள்: | 323 |
| முடிவுகள் வந்தவை: | 83 |
| ஜனதா தளம்: | 21 |
| பாரதிய ஜனதா: | 11 |
| மார்க்ஸிய கம்யூனிஸ்ட்: | 02 |
| இந்திய கம்யூனிஸ்ட்: | 10 |
| இந்திரா காங்கிரஸ்: | 17 |
| ஏனையவை: | 22 |

**மகாராஷ்டிரம்**

| | |
|---|---|
| மொத்த இடங்கள்: | 288 |
| முடிவுகள் வந்தவை: | 55 |
| ஜனதா தளம்: | 3 |
| பாரதிய ஜனதா: | 08 |
| இந்திரா காங்கிரஸ்: | 39 |
| சிவசேனை: | 04 |
| மார்க்ஸிய கம்யூ: | 01 |
| ஏனையவை: | — |

**அருணாசலப் பிரதேசம்**

| | |
|---|---|
| மொத்த இடங்கள்: | 60 |
| முடிவுகள் வந்தவை: | 07 |
| இந்திரா காங்கிரஸ்: | 07 |

**ஒரிஸ்ஸா**

| | |
|---|---|
| மொத்த இடங்கள் : | 199 |
| முடிவுகள் வந்தவை : | 146 |
| ஜனதா தளம்: | 123 |
| இந்திரா காங்கிரஸ் : | 10 |
| பாரதிய ஜனதா: | 2 |
| மார்க்ஸிய கம்யூ: | 01 |
| இந்தியக் கம்யூ: | 05 |
| ஏனையவை : | 05 |

**மத்தியப் பிரதேசம்**

| | |
|---|---|
| மொத்த இடங்கள்: | 320 |
| முடிவுகள் வந்தவை: | 303 |
| பாரதிய ஜனதா: | 210 |
| ஜனதா தளம்: | 24 |
| இந்திரா காங்கிரஸ்: | 55 |
| இந்திய கம்யூ: | 3 |
| ஏனையவை: | 11 |

**இமாசலப்பிரதேசம்**

| | |
|---|---|
| மொத்த இடங்கள் : | 68 |
| முடிவுகள் வந்தவை: | 62 |
| பாரதிய ஜனதா : | 42 |
| ஜனதா தளம்: | 10 |
| இந்திரா காங்கிரஸ் : | 08 |
| இந்தியக் கம்யூனிஸ்ட் : | 01 |
| ஏனையவை: | 01 |

**ராஜஸ்தான்**

| | |
|---|---|
| மொத்த இடங்கள் : | 200 |
| முடிவுகள் வந்தவை : | 200 |
| பாரதிய ஜனதா : | 85 |
| ஜனதா தளம்: | 54 |
| இந்திரா காங்கிரஸ் : | 50 |
| மார்க்ஸிய கம்யூ: | 11 |

**குஜராத்**

| | |
|---|---|
| மொத்த இடங்கள் : | 182 |
| முடிவுகள் வந்தவை : | 181 |
| ஜனதா தளம் : | 70 |
| பாரதிய ஜனதா : | 66 |
| இந்திரா காங்கிரஸ் : | 33 |
| ஏனையவை: | 12 |

## இளைய தலைமுறையினருக்கு எம் கல்வித் திட்டம் பயனற்றது

### வேம்படி மகளிர் பரிசளிப்பில் உரை

யாழ்ப்பாணம், மார்ச் 2

எமது சமுதாயத்தில் பொருளாதார தேவைகளை பூர்த்தி செய்யவோ, அல்லது முகங் கொடுக்கவோ கூடிய முறையில் எமது கல்வித் திட்டம் அமைக்கப்படவில்லை.

இது எமது இளைய தலைமுறையினருக்கு நன்மைபயக்காது.

இப்படி கவலை தெரிவித்திருக்கிறார் கல்விமானும், முன்னாள் வேம்படி மகளிர் கல்லூரி அதிபருமான திருமதி ஏ. இராஜரெட்ணம்.

யாழ், வேம்படி மகளிர் உயர்கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே இவ்வாறு கூறினார் திரு. சி. தியாகராசா சிறப்பு விருந்தினராகக்கலந்து கொண்டார். கல்லூரி அதிபர் செல்வி இராஜரெட்ணம் தலைமை வகித்தார்.

பிரதம விருத்தினர் திருமதி ஏ. இராஜரட்ணம் தொடர்ந்து கூறியதாவது:

அண்மைக் காலங்களிலே கல்வித் துறையிலே பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டது உண்மைதான். ஆனாலும் அவை சமுதாயப் பார்வையுடையவையாக, சமுதாயத் தேவைகளைப் பூர்த்தி செய்பவையாக அமையவில்லை, சமுதாயத்தின் பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பவையாக அமையவில்லை. இன்னும் கல்வித் திட்டங்கள் வெறும் ஏட்டுக் கல்வியை மையமாகக் கொண்டு இருக்கின்றன.

எமது சமுதாயத்தில் 70 வீதமானோர் விவசாயம், மீன்பிடித்தல், சிறுகைத் தொழில், தோட்டத்தொழில் என்பவற்றில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பொழுது, எமது கல்வி அவற்றிற்கேற்ப அமைய வேண்டாமா! ஏட்டுக் கல்விக்கு முதலிடமும், முன்னுரிமையும் கொடுக்கலாமா?

இப்படி அவர் கூறினார்.

ஆண்டறிக்கையை செல்வி இராஜரெட்ணம் சமர்ப்பித்து பேசினார்.

மாகாண பணிப்பாளர் கலாநிதி சிரோன்மணி இராஜரெட்ணமும் உரையாற்றினார். திருமதி இராஜரெட்ணம் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கினார்.

இறுதியில் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்சிகளும் இடம் பெற்றன.

## திருமறைக் கலாமன்றத்தின் பணிகள் பாராட்டுக்குறியவை

### நாடகப் பாத்திரம் வழங்கும் வைபவத்தில் உரை

குருநகர், மார்ச் 01

''எமது மறை மாவட்டத்திற்கு கலை, கலாச்சார தேவைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் யாழ்-திருமறை மன்றத்தின் பணிகளைப் பாராட்டாமல் இருக்க முடியாது.''

யாழ்-மறைக் கல்வி நடுநிலையத்தில் திரு. வி. ஜே. கொன்ஸ்ரன்ரைன் தலைமையில் நடைபெற்ற ''களங்கம்'' நாடகப் பாத்திரம் வழங்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து பாத்திரங்களை வழங்கிப் பேசுகையில் அருட்திரு. ஜேறோ செல்வநாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் ''கலை, கலாச்சார வளர்ச்சியில் எழுத்துச் சீர்திருத்த'. தேம்பாவணி விழா' சைவசித்தாந்த ஆய்வு வட்டம் போன்ற இன்னோரன்ன பணிகளைக் கடந்த காலங்களில் மன்றம் செய்திருக்கின்றதுஎன்றார்.

திரு. அ பிரான்ஸிஸ் ஜெனம், டி. வி. அன்ரனி. சி. எம். நெல்சன் ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள். திரு. எஸ். ஜெயசிங்கம் நன்றி தெரிவித்தார். (க-51)


## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



உயர்திரு சவிரிமுத்து விசுவாசம்

அன்னை மடியில் : 3 - 4 - 1897

ஆண்டவன் அடியில் : 2 - 3 - 1979

நீங்கள் எம்மை விட்டுச் சென்று பத்தாண்டுகள் சென்றும் உங்கள் நினைவில் வாழும்

வி. இம்மானுவல், 845, கண்டி வீதி, அரியாலை.

அன்பு மனைவி, மகன், மருமகள், பேரப்பிள்ளைகள் (11886)


Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

பாடசாலைப் பிள்ளைகளின் மதிய
உணவுத் திட்டத்திற்கு உகந்தது-

"ஜீவாகாரம்"

இதில் தேவையான அளவு கலோரி, புரதம், விற்றமின், தாதுப்பொருட்கள் அடங்கி உள்ளது.

அண்ணா தொழிலகம்
இணுவில்.



# உதயன்

02 - 03 - 1990 வெள்ளிக்கிழமை


அருந்துங்கள்!

'அண்ணா கோப்பி'

100 விதம் சுத்தமான கோப்பியினால் தயாரிக்கப்பட்டு 100g, 50g, 15g பக்கட்டுக்களில் விற்பனையாகின்றது. இவற்றை பாவித்த பின் வெற்றுப் பைக்கட்டுக்களைக் கொடுத்து இனாம் பொருட்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

அண்ணா கோப்பிக் கடை,
யாழ்ப்பாணம்.

# வடக்கு, கிழக்கு பாதுகாப்புக்கு மாகாண ரீதியில் காவல்துறை

## புலிகளின் கட்சி கோரிக்கை

மட்டக்களப்பு, மார்ச் 2

**தமிழீழ தாயகத்தில் உள்ள மக்களின் பாதுகாப்பு, சட்டம், ஒழுங்குப் பிரச்சினைகளில் ஸ்ரீலங்கா இராணுவம் ஈடுபடக் கூடாது. மாகாண ரீதியாக உருவாக்கப்படும் தமிழ், முஸ்லிம் காவல்துறையினர் மூலம் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.**

**— விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி இப்படிக் கோரியிருக்கிறது.**

**முன்னணியின் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றிலேயே இப்படிக் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது**

மட்டக்களப்பு வாகரையில் தொடர்ந்து ஐந்து நாட்களாக நடைபெற்ற விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயற்குழு மாநாடு நேற்று ஐந்தாவது நாளுடன் நிறைவு பெற்றது.

இந்த மாநாட்டுக்கு முன்னணியின் தலைவர் திரு.கோபாலசாமி மகேந்திரராஜா (மாத்தயா) தலைமை வகித்தார்.

மாநாட்டில் எட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

எஞ்சிய ஏழு தீர்மானங்களும் வருமாறு :-

1. வடக்கு, கிழக்கு மாகாணசபை ஜனநாயக வழியில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபையல்ல. சபையின் நிர்வாகம் நீண்ட காலமாகச் செயல் இழந்துள்ளது. இந்நிலையில் இச்சபை உடனடியாகக் கலைக்கப்பட்டு மீண்டும் தேர்தல் நடைபெற வேண்டும்.

2. தமிழ், முஸ்லிம் மக்கள் தமது அரசியல் உரிமைகளை வென்றெடுத்தல், சமூக, பொருளாதார வாழ்வை மேம்படுத்தல், தாயகப் பூமியைப் பாதுகாத்தல் ஆகியவற்றுக்கான ஒரு புரட்சிகர அமைப்பின் கீழ் அணி திரள வேண்டும். தமிழ், முஸ்லிம் ஒற்றுமையைச் சீர்குலைக்க முயலும் சக்திகள் குறித்து இரு சமூகங்களும் விழிப்புடன் இருத்தல் வேண்டும்.

3. அரசமைப்பின் ஆறாவது திருத்தம் எமது மக்களின் அடிப்படை அரசியல் உரிமைகளை மீறுவதாலும், அரசியல் மரபுகளுக்கு முரணானதாலும் அது உடனடியாக வாபஸ்பெறப்பட வேண்டும்.

4. திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்கள் தொடர்வதால் இனப்பிரச்சினை மேலும் சிக்கலடைந்து, சமாதானம் சகஜநிலைக்குப் பங்கம் ஏற்படலாம். ஸ்ரீ லங்கா அரசு இவற்றை நிறுத்துதல் வேண்டும்.

5. மலையகத் தமிழ் மக்களுக்கு சகல அரசியல் உரிமைகளும் வழங்கப்பட வேண்டும். அம்மக்களின் சமூக, பொருளாதார வாழ்வை மேம்படுத்த ஸ்ரீலங்கா அரசு உருப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

6. வடக்கு, கிழக்கு மாகாணத்தில் சமாதான சகஜ நிலை நிலவுவதால் அவசர காலச் சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும்.

— மேற்படி தீர்மானங்களுடன், ஈ. பி. ஆர். எல். எவ். முன்வைத்துள்ள மாகாண சபைக் கலைப்புத் தொடர்பான 19 அம்சக் கோரிக்கை சமாதானம், ஜனநாயக அரசியல் ஆகியவை உருவாகத் தடையாக இருப்பதாலும், மக்களுக்குத் தொடர்ந்து அரசியல் நெருக்கடிகளை உருவாக்கும் திட்டமிட்ட செயல் என்பதாலும் இதனை வன்மையாகக் கண்டிக்கிறோம் என்று தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது.

— விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகத்தினால் செய்தியாளர்களுக்கு வழங்கப்பட்ட குறிப்பில் இத்தகவல்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

(உ-21)

## மலேசிய, சிங்கப்பூர் பென்ஷன்; அவரவர் வீடுகளுக்கு வரும்

யாழ்ப்பாணம், மார்ச் 2

மலேசியா, சிங்கப்பூர் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான பெப்ரவரி மாத கொடுப்பனவுக்குரிய பற்றுச் சீட்டுகள் யாழ். செயலகத்தினால் அவரவர் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

யாழ். செயலகம் நேற்று வெளியிட்ட குறிப்பு ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் யாழ். செயலகத்திற்கு தமது முகவரிகளை அனுப்பி வைத்தவர்களுக்கு மட்டுமே இந்தப் பற்றுச்சீட்டுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. முகவரி அனுப்பாதவர்களின் பற்றுச் சீட்டுகள் அவர்கள் ஏற்கனவே ஓய்வூதியம் பெற்று வந்த வங்கிகளுக்கே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதுவரை தமது வீட்டு முகவரியை அனுப்பாதவர்கள் ஓய்வூதிய இலக்கம், முழுப் பெயர், முகவரி, ஓய்வூதியத் தொகை (டொலரில்) பணம் பெறும் வங்கி ஆகிய விவரங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன் செயலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-9)

## மரண அறிவித்தல்கள்

### சிவரத்தினம் குலசேகரசிங்கம்

சிவரத்தினம் குலசேகரசிங்கம் 01-03-1990 காலை 11-30 மணியளவில் இறைவனடி சேர்ந்துள்ளார்.

இவர் முன்னாள் யாழ். மத்திய கல்லூரி இளைப்பாறிய ஆசிரியரும், பலாலி ஆசிரியர் கலாசாலை. கொக்குவில் பல்நுட்பக் கல்லூரி இளைப்பாறிய விரிவுரையாளரும் ஆவர். முன்னாள் சாவகச்சேரி றிபேக் கல்லூரி ஆசிரியை ஜவமணி B. A. (ஜீவி) அவர்களின் அன்புக் கணவரும், ஜனாவின் அருமைத் தகப்பனாரும், மட்டக்களப்பு உதவி அஞ்சல் அதிபர் மரியநாயகம் போல் அவர்களின் மாமனாரும், ஜெயசிங்கம் (கொக்குவில் பல் தொழில் நுட்பக் கல்லூரி இளைப்பாறிய அதிபர்), காலஞ்சென்ற தங்கராணி ஜெயரட்டினம் அவர்களின் சகோதரரும், ஜெயமணி, குணமணி,இராசையா (அவுஸ்திரேலியா) காலஞ்சென்ற அட்வக்கேற் ஜெயவீரசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், மிருணாளினி, டிலோஜென், நிருணாளினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நல்லடக்கத்திற்காக இலக்கம் 14, மூன்றாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் இல்லத்திலிருந்து நாளை 03-03-1990 சனிக்கிழமை மாலை 3-00 மணிக்கு சென். பீற்றர்ஸ் சேமக்காலைக்கு (கொட்டடி) எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
மரியநாயகம் போல்
14, 3-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். [11887]

### திருமதி மனோன்மணி தேவசகாயம்

ஏழாலை தெற்கைச் சேர்ந்த மனோன்மணி தேவசகாயம் 28-2-1990 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார். இவர் ஓய்வுபெற்ற ஆசிரியையும், நுணாவிலைச் சேர்ந்த வைத்திய கலாநிதி தம்பையா தேவசகாயத்தின் அன்பு மனைவியும், தேவமனோகரி, தேவரஞ்சினி (கனடா) தேவபாலன் (மாலைதீவு) அருள்திரு தேவநேசன் (தென் இந்தியத் திருச்சபை, மானிப்பாய்) ஆகியோரின் அன்புத் தாயாரும், J. N. விஜயரத்தினம், இளைப்பாறிய தலைமை ஆசிரியரின் அன்புச் சகோதரியும், அருள்திரு, S. C. ஆனல்ட் (தென் இந்தியத் திருச்சபை, வரணி)ரி. யோகேஸ்வரன் (கனடா), சாமினி தேவபாலன் (மாலைதீவு) சுனேத்திரா தேவநேசன் (ஆசிரியை, சென். திரேசா மகா வித்தியாலயம், கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமியாரும், சாமினி, சாளினி, டிலானி, சியோ, சுஜீவ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதி ஆராதனை ஏழாலை தெற்கிலுள்ள அவரது இல்லத்தில் 3 - 3 - 1990 ஆம் திகதி மாலை 3 மணிக்கு நடைபெற்று ஏழாலை தெற்கு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

உற்றார், உறவினர்' நண்பர்கள் இவ்வறிவித்தலை தயவாய் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த. தேவசகாயம்
ஏழாலை தெற்கு,
சுன்னாகம். (2703)

### நடராசா சிவலிங்கசோதி

ஏழாலைக்கிராமசபை தொழில் நுட்ப உத்தியோகஸ்தரும், சுன்னாகத்தைப் பிறப்பிடமாக கொண்டவரும், மல்லாகத்தில் வசிப்பவருமாகிய நடராசா சிவலிங்கசோதி அகால மரணமானார்.

இவர் நடராசா, காலம் சென்ற பொன்னம்மா, ஆகியோரின் மூத்த புதல்வரும் சறோஜாதேவியின் அன்புக் கணவரும் தயாளினி, நடேசன், சபேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலம் சென்ற ஆறுமுகசாமி, திருமதி இராசம்மா ஆறுமுகசாமி ஆகியோரின் அன்பு மருமகனும், லீலாவதி, விமலாவதி, சிவானந்தசோதி, ஆகியோரின் அன்புச் சகோதரனும் குலசிங்கம், பாலசிங்கம், இராஜசிங்கம், சகுந்தலா தேவி, இராஜேந்திரம், ஜெயராஜா, லலிதமனோகரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சறோஜாதேவி, வசந்தமலர், திருமகள், சிவராசா, ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 1-3-90 வியாழக்கிழமை மல்லாகம் மயானத்தில் நடைபெற்றது. இத்தகவலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்,

தகவல்: ஆ. பாலசிங்கம்
பங்களா ஒழுங்கை,
மல்லாகம், (2704)

### திரு. சண்முகம் வேலுப்பிள்ளை

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கரம்பனை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திரு. சண்முகம் வேலுப்பிள்ளை காலமானார்.

இவர் காலஞ்சென்ற சவுந்திரத்தின் அன்புக் கணவரும், தவராஜா (பிறிலியன்ற் நகைக் கடை), தவராணி, தவசீலன் (சவுதி) ஆகியோரின் அன்புத் தந்தையும், இலட்சுமணன் (தொழில் திணைக்களம்) அவர்களின் அன்பு மாமனாரும், தபோதன், மிதுசிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கரம்பன் இல்லத்தில் 02-03-1990 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் நடைபெறும். உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்;
க. இலட்சுமணன்
கரம்பன் மேற்கு. [11937]

எமது நேற்றைய புதிய வெளியீடு
○ சந்திரசேகர் ○ நிழல்கள் ரவி ○ சீதா
ஆடிவெள்ளி (ஒறிஜினல்)
எமது இன்றைய புதிய வெளியீடு
கமல்ஹாசன் இரட்டை வேடங்களில்
இந்திரன் சந்திரன் (ஒறிஜினல்)
வீடியோ விமல்
117, மானிப்பாய் வீதி,
ஐந்துசந்தி (மேல்மாடி), யாழ்ப்பாணம்.
(11890)

ஜோதிட ஜோதி
முன்வினை - முயற்சி - திருவருள்

மாசி இதழ்
வெளிவந்துவிட்டது!

- சனிப் பெயர்ச்சியும் உங்கள் பலனும்
- உங்களுக்கு இம்மாதம் எப்படி?
- பிரயாணம் செய்ய நல்லநேரம்
- எண் தத்துவம் 6 — 7
- சோதிடம் பயில்வோம்
- ரமண மகரிஷியின் சாதகக் குறிப்பு
- சுபயோகங்கள்

இன்னும் பல அம்சங்கள்....
பிரதி விலை ரூ. 10/-
உதயன்
முகவர்களிடம் பிரதிகளை வாங்குங்கள்!
[பி-3416]

## தேர்தலில் 'சாதனை'!

புதுச்சேரி மார்ச் 2

புதுச்சேரி சட்டசபைத் தேர்தலில் ராஜ்பவன் தொகுயில் ஒரு சாதனை இடம்பெற்றது.

சுயேச்சையாகப் போட்டியிட்ட . டி. சிவராஜ் ஒரேஒரு வாக்குப் பெற்று 'சாதனை' படைத்தார்

மொத்தம் 13 பேர் போட்டியிட்ட இத்தொகுதியின் மொத்த வாக்காளர் எண்ணிக்கை 8,625 வாக்களித்தோர் எண்ணிக்கை 5,348 ஆகும்

(ஒ - 6)

## பாலைதீவுக்கு யாத்திரிகர்கள்

குருநகர், மார்ச் 2

பாலைதீவு புனித அந்தோனியார் ஆலயத்திற்கு ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் சென்றவண்ணம் இருக்கிறார்கள்.

நேற்றும், நேற்று முன்தினமும் குருநகர் இறங்குதுறையில் ஆயிரக் கணக்கான யாத்திரிகர்கள் பாலைதீவுக்குச் சென்றுள்ளனர்.

இம்மாதம் 4 ஆம் திகதி ஞாயிறு நடைபெற வேண்டிய திருநாள் கொண்டாட்டங்கள் நடைபெறமாட்டா என யாழ். ஆயர் வண. பிதா தியோகுப்பிள்ளை ஆண்டகை ஏற்கனவே அறிவித்திருந்தது தெரிந்ததே. (ஒ-51)

## மரண அறிவித்தல்கள்

### திரு. வேலுப்பிள்ளை அமிர்தலிங்கம்

(27-2-90 ஆம் திகதி வெளியாகிய மரண அறிவித்தல் தொடர்பாக:-)

அன்னாரின் ஈமக்கிரியைகள் 02-3-1990 (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 2-00 மணியளவில் கீழ்காணும் விலாசத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. அமிர்தகலா
24, வைமன் றோட்,
யாழ்ப்பாணம். (11932)

### சொலமன் வேலுப்பிள்ளை பொன்னுத்துரை

கற்கோவளம், பருத்தித்துறையைச் சேர்ந்த சொலமன் வேலுப்பிள்ளை பொன்னுத்துரை (இளைப்பாறிய கிராமத் தலைமைக்காரன்) காலமானார்.

இவர் சிவபாக்கியத்தின் அன்புக்கணவரும், அற்புதநேசம், அற்புதானந்தன், அற்புதநாயகம், அற்புதகுமார், அற்புதரூபன், அற்புதவதனி ஆகியோரின் அன்புத் தந்தையும், சென்ஜோன்ஸ்ராஜா, நளினமலர், சுமணாவதி, சாந்தகுமாரி, சந்திரகுமாரி, இராசநாயகம் ஆகியோரின் மாமனாரும், டிலோசினி, உசாந்தினி, டினேஸ், ஹர்சனி, ஜெபன், ஜஸ்ரின், அருயினி, அருள்ராஜ் ஆகியோரின் அன்புப் பேரனும், இராசையா, தம்பிஐயா ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு நல்லடக்கத்திற்கு பருத்தித்துறை மெதடிஸ்த சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
பொ. அற்புதகுமார்
கற்கோவளம்,
பருத்தித்துறை. [11888]

### செ. நிற்குணானந்தன்
(Retd. C.A.S.)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. செ. நிற்குணானந்தன் (முன்னை நாள் உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி, யாழ்ப்பாணம்) 01-03-1990 இல் காலமானார்.

அன்னார் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், ஹைமா (Colonial Motors Colombo), மகாரூபன் (Ceylon Co'd Stores), ஆனந்தரூபன் (Jash & Co. Saudi Arabia), சக்திரூபன் (United Garments Colombo), நிர்த்தனரூபன், திருமதி ஊர்மிலா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், க. ஜெயக்குமாரன் (Lion Enterprises, Urumpirai) அவர்களின் மாமனாரும், கௌதமனின் பேரனும், காலம் சென்ற டாக்டர் செல்லையா - பொன்னம்மா தம்பதிகளின் மகனும், காலம் சென்ற டாக்டர் வைத்திலிங்கம்-ஆசைரத்தினம் தம்பதிகளின் மருமகனும், ரதிமதி, காலம் சென்ற பூமதி, சற்குணானந்தன் (முன்னாள் உதவி இரசாயன பகுப்பாய்வாளர், கொழும்பு) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை சனிக்கிழமை காலை 10-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[11889]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 2- 03 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org